# அரங்கம்
செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்புடகம்


வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஒக்டோபர் 05, 2018. இதழ் - 33










**'திருப்பெருந்துறை குப்பை விடயத்தில் மாத்திரம் விட்டுக்கொடுக்க மாட்டேன்'**

மட்டக்களப்பின் முன்னைய தலை நகரங்களில் ஒன்றாக கருதப்படுவது....

பக்கம் - 09



**பெண்களுக்கு எதிரா இந்தக் கொடுமையை சட்டம் மாற்றுமா?**

மாதவிடாய் காலத்தில் பெண்களைத் தனிமைப் படுத்துவது குற்றம்


பக்கம் - 04



**'திரித்துக்' கூறப்பட்ட வரலாற்றைத் 'திருத்திக்' கூறும் திரைப்படம்**

இத்திரைப்படத்தின் வெள்ளோட்டக் காட்சிக்கு வந்த அழைப்பினை ஏற்று....

பக்கம் - 04



**'தமிழ்' என்னும் புதிய வாத்தியம்**

தமிழர் வாத்தியங்களில் ஒன்று நாதஸ்வரத்துடன் இணைந்து வாசிக்கும் மேளம்.

பக்கம் - 12




தம்மை விடுதலை செய்யுமாறு கோரி மூன்று சிறைச்சாலைகளில் சுமார் 65 தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு மகசின் சிறையில் 43 பேரும், கண்டியில் 10 பேரும் மற்றும் அநுராதபுரத்தில் 12 பேரும் இவ்வாறாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை எம். சத்திவேல் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள 11 சிறைச்சாலைகளில் 107 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறும் சத்திவேல் அவர்கள், இவர்களில் தண்டனைக் கைதிகளும் அடங்குவதாகக் கூறினார். இலங்கையில் அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டமே இவர்களை குற்றவாளிகளாக ஆக்கியுள்ளதாக கூறும் அவர், இவர்களை ஒரு அரசியல் ஏற்பாட்டின் கீழ் நிபந்தனை எதுவும் இன்றி, உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்கிறார்.

**பொதுமன்னிப்பா?**

அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு கோருகிறீர்களா என்று கேட்டதற்கு பதிலளித்த அருட்தந்தை சத்திவேல், அது பொது மன்னிப்பா அல்லது வேறு எதுவுமா என்பதை ஜனாதிபதிதான் முடிவு செய்ய வேண்டும் என்றும் தம்மைப் பொறுத்தவரை தமிழ் அரசியல் கைதிகள் குற்றஞ்செய்யவில்லை என்றும், பயங்கரவாத தடைச்சட்டந்தான் அவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கியது என்றும் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தை சட்ட ரீதியாக அல்லாமல், அரசியல் அடிப்படையில் கையாள வேண்டும் என்றும் அவர் கோருகிறார்.

**தமிழ் தேசியக் கூட்டமைப்பு**

அரசியல் கைதிகள் விவகாரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அக்கறையற்றுச் செயற்படுவதாக அருட்தந்தை சத்திவேல் குற்றஞ்சாட்டுகிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் போது அவருக்கு ஆதரவளிக்க 10 நிபந்தனைகளை விதித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையும் முன்வைத்ததாக கூறியிருந்தது என்று குறிப்பிட்டார். அந்த நிபந்தனையை

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## இவ்வருட இறுதிக்குள் காணிகளை விடுவிக்க உத்தரவு!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்கள் காணிகளை இந்த வருடம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக விடுவிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளதாக தெரிகிறது.

உரிய அதிகாரிகளுக்கு இதற்கான உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்துள்ளார். வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக உருவாக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிக்குழுவின் மூன்றாவது சந்திப்பின் போது ஜனாதிபதி இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கான ஒரு கால அட்டவனையை தயாரிக்குமாறும், இந்த விவகாரம் குறித்த முன்னேற்றங்களை, அடுத்த மாதம் நடக்கவிருக்கும் செயலணிக்குழுவின் கூட்டத்தில் அறிவிக்குமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

## அரசஅதிபரின் ஆணைக்கிணங்க ஆவணங்கள் திரட்டல்

--காரைதீவு நிருபர் சகா--

தமது இருப்பிடங்களை விடுவிக்குமாறு கோரி போராடி வரும் பொத்துவில் கனகர் கிராம மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான நோக்கில் அவர்களது விபரங்களை பதியும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கவின் உத்தரவிற்கமைவாக பொத்துவில் 60ஆம் கட்டை கனகர்கிராம மக்களின் காணி உரிமைக்கான ஆணவங்களைப் பதிவுசெய்யும் வேலைத்திட்டம் தற்போது நடைபெற்றுவருகிறது.

அவர்கள் கடந்த 50 நாட்களைக் கடந்து போராடிவரும் அந்த மகரக்கொட்டிலில் இருந்தே இப்பதிவு இடம்பெற்றுவருகின்றது. அவர்களிடமிருந்து பல தரவுகள் திரட்டப்பட்டுவருகின்றன. அந்த ஆவணங்கள் யாவும் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்பு பொத்துவில் புதிய பிரதேசசெயலாளரிடம் கையளிக்கப்படவுள்ளன.

இதற்கென அந்த மக்கள் மத்தியிலிருந்து 10 பேர் கொண்ட குழுவும்



தெரிவுசெய்யப்பட்டு இயங்கிவருவதைக் காணக்கூடியதாயிருந்தது.

அங்கு இறுதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டாரநாயக்க, கிழக்குமாகாண காணி ஆணையாளர் தர்மகுமார, உதவிஆணையாளர் ரவிராஜ் உள்ளிட்ட குழுவினர் வந்து பார்த்து கலந்துரையாடிய விடயங்களையிட்டு மக்கள் நம்பிக்கை கொண்டவர்களாகவுள்ளனர்.

அதாவது இங்கிருக்கக்கூடிய 30 வீட்டுத்திட்டத்திலிருந்தவர்களுக்

தொடர்ச்சி... (பக்கம் -02 )


அரங்கம்
செய்திகள்

விளம்பரங்களுக்கு
இல : 227, பார் வீதி,
மட்டக்களப்பு.

arangamnews@gmail.com
071 399 9091

அரங்கம் பத்திரிகை
மட்டுநகரில் கிடைக்கும் இடம்
அரங்கம் முகவர்கள்

ARJUNA ADVERTISING
#19A, Baily Road, Arasady, Batticaloa.
Mob : 0777 222 489 / Tel&Fax : 065 222 6763 /mail: arjunaadds@gmail.com

EAST LINK
AGENCY POST OFFICE
NO : 196, Trinco Road,
Batticaloa.

## காரைதீவு கடற்கரையில் சிறப்பாக நடைபெற்ற சிறுவர்தின களியாட்டம்!



உலக சிறுவர்தினத்தை முன்னிட்டு காரைதீவு விபுலாநந்தா மொன்டிசோரி முன்பள்ளிப்பாடசாலை இவ்வாண்டும் காரைதீவுக் கடற்கரையில் நேற்றுமாலை சிறுவர்தின களியாட்டநிகழ்வை நடாத்தியது.

இந்நிகழ்வு நேற்று (2) செவ்வாய்க்கிழமை மாலை பாடசாலை ஆசிரியைகளான நிலந்தினி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலும் சிறப்பதிதியாக உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜாவும் கலந்து சிறப்பித்தனர்.

சிறுவர்கள் பெற்றோர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் சிறுவர் விளையாட்டுக்கள் வேடிக்கை விநோத நிகழ்ச்சிகள் ஆடல்பாடல் உள்ளிட்ட பல வித நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விளையாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சகல மாணவர்களுக்கும் பரிசுகள் அதிதிகளால் வழங்கிவைக்கப்பட்டன.
நிகழ்ச்சிகளை விளையாட்டு உத்தியோகத்தர் லோ.சுலக்சன் மத்தியஸ்தம் வகித்து நடாத்த ஆசிரியர் வி.விஜயபவா நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

## இராஜாங்க அமைச்சர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அழைப்பு




நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் அவரது மகன் ஹிராஸ் அஹமட், வாகரை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.தாஹீர் அபுல்ஹசன் ஆகியோர் மீது லங்கா பில்டேர்ஸ் கோப்பரடிவ் சொஸையிட்டி என்ற நிறுவனத்தின் தலைவர் பிரபாத் உக்வத்தவினால் வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை கடந்த புதன்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது அடுத்த தவணைக்கான வழக்கு 2018.12.07ம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## உன்னத கனவுகளின் காலத்தின் தோழர்



மறைந்து 14 ஆண்டுகள்!!
தோழர் உமாகாந்தன் எமது ஈழமக்கள் பாரம்பரியத்தின் சர்வதேசியவாதி.
உலகளாவிய பார்வையுடன் இலங்கை ஈழதேசிய வர்க்க சமூக விடுதலைப் போராட்டத்தை அணுகியவர்.
1980கள் 90களின் புலம்பெயர் அரசியல் இலக்கியச் சூழலில் தோழர் உமாகாந்தன் மிக முக்கிய ஆளுமை.
அவரது ஆளுமையின் தாக்கத்துடனான பிரான்சுப் பாரம்பரியம் இன்றளவில் நிலவுகிறது.
பாரதியைப் போல் குறுகிய காலம்தான் இவ்வுலகில் அவர் வாழ்ந்திருந்தாலும்

**சிறிதரன் திருநாவுக்கரசு**

வரலாற்றில் அவரது தடங்கள் அழுத்தமானவை.


ஜனநாயக இடைவெளி அரித்தழிக்கப்பட்ட மிக அபாயகரமான நாட்களில் ஜனநாயகத்தின் பதாகைகளை உயர்த்திப்பிடித்தபடி கம்பீரமாக பாரிஸ் நகர வீதிகளில் உலாவந்தவர்.
தனது குறுகிய கால வாழ்க்கையை ஈழமக்களின் விடிவிற்காகவும் புலம்பெயர் முற்போக்கு அரசியல், இலக்கியத்திற்காகவும் உறவுக்காகவும் சர்வதேச சகோதரத்திற்காகவும் அர்ப்பணித்தவர்.
அவரது வாழ்வும் மரணமும் விரிவாக பதிவு செய்யப்பட வேண்டும்.
பாரதியின் வார்த்தைகளில் ஒளிபடைத்த கண்களும் உறுதிகொண்ட நெஞ்சுமாக, வடமராட்சி மண்ணில் பிறந்து, உலக மானிடனாக, வாழ்ந்து மறைந்தவர்.
தடம்பதித்து, மறைந்த பலதோழர்களின் உறவுகள், பெற்றோர், உற்றோர் பெருமைக்குரியவர்கள்.
பல சந்தர்ப்பங்களில் அவர்கள் வாழ்ந்த வீடுகளிருந்த இடங்களின் நிசப்தம் மனதை நெருடுகிறது.
இந்த தோழர்கள் தமது குடும்பங்களுக்கோ, உற்ற சுற்றத்திற்கோ எதுவும் செய்யாமல், சமூகவிடுதலையை மூச்சாகக் கொண்டு வாழ்ந்து, மறைந்தவர்கள்.
தோழர் உமாகாந்தனும் அவ்வாறுதான்.
உமாகாந்தன் எம் தோழர். எமது பெருமிதம்.

தொடர்ச்சி...

## அரசஅதிபரின் ஆணைக்கிணங்க ஆவணங்கள் திரட்டல்

கு எந்தப் பிரச்சினையுமில்லை. அதனை விடுவிக்கலாம். ஆனால் அதைவிட மொத்தமாக 278குடும்பங்கள் வாழ்ந்துள்ளன. அவற்றை உறுதிப்படுத்துவதற்கு சில ஆவணங்கள் தேவை. பெர்மிட் அல்லது அங்கிருந்ததற்கான பக்கத்துக் காணிச் சொந்தக்காரர்களின் பெர்மிட், அங்கு வாழ்ந்தபோது எடுத்த பிறப்பு இறப்பு விவாகச்சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது புனர்வாழ்வுக்காக பெற்றுக்கொண்ட கடன் உதவி சான்றிதழ் அல்லது வாக்காளர் அட்டை இப்படி ஏதாவது ஒரு ஆவணமாவது காட்டுகின்ற பட்சத்தில் அதனை பரிசீலனைசெய்து காணிவழங்க நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இந்த ஆவணங்களை வழங்குகின்ற இறுதி தினம் அக். 16ஆம் திகதி ஆகும். அன்று அவற்றை பரிசீலனை செய்து வழங்கலாமென வந்த குழுவினர் கூறியிருப்பது அவர்கள் மத்தியில் பெரும் திருப்தியை ஏற்படுத்தியுள்ளது.
அதற்காக ஆவணங்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

## மழை வரும்!



வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள சிறிய அளவிலான குழப்பம் காரணமாக இலங்கையின் கிழக்கு கரையோரமாக எதிர்வரும் வாரத்தில் மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் கூறுகிறது.

இதன்காரணமாக கடந்த வாரத்தில் யாழ் குடா பகுதியில் கணிசமான மழை பதிவாகியுள்ளதாக வானிலை நிலையத்தை சேர்ந்த கே. சூரியகுமாரன் கூறினார்.

மட்டக்களப்பை அண்டிய பகுதிகளிலும் குறிப்பாக, நவகிரி, தும்பங்கேணி, கதிரவெளி, வாகனேரி மற்றும் பாசிக்குடா ஆகிய இடங்களில் சிறிய அளவில் இதுவரை மழை பதிவாகியுள்ளது.

எதிர்வரும் வாரத்திலும் இது தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் கட்சிகளுடனான சந்திப்பு

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்கள் சார்பில் அதி உச்சபட்ச ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒரு பொது சின்னத்தில் கீழ் ஓரணியில் போட்டியிட வைப்பதற்காகக் 'கிழக்குத் தமிழர் ஒன்றியம்' எடுத்துக் கொண்ட முயற்சியின் முக்கிய கட்டமாக ஓரணியில் இணைந்து போட்டியிட சம்மதித்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை தமிழர் மகா சபை ஆகிய ஐந்து தமிழ் கட்சிகளும் இணைந்த அரசியல் கூட்டணியொன்றை (Poltical Alliance) உருவாக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைக் கைச்சாத்திடுவது சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டமொன்று 05.10.2018 வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறுவதற்கான ஏற்பாட்டை செய்துள்ளதாக கிழக்கு தமிழர் ஒன்றியம் கூறியுள்ளது.

இது விடயமாக கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் அதன் மாகாண இணைப்பாளர்களில் ஒருவருமான செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் தகவல் தருகையில், 'இந்த முயற்சியின் முதற்கட்டமாக அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் கிழக்குத் தமிழர் ஒன்றியம் தனித்தனியே சந்தித்து பேசியது. அடுத்த கட்டமாக கடந்த 22.08.2018 அன்று களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் மண்டபத்தில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரிடத்தில் கூட்டிக் கலந்துரையாடினோம். இக் கலந்துரையாடல் கூட்டத்தில் தீர்மானித்தபடி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினைத் தயாரித்து அதன் நகல் வடிவத்தினை தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அனுப்பி வைத்தோம். இந்த முயற்சியின் அடுத்த கட்டமாகவே 05.10.2018 அன்றைய சந்திப்பு கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது' என்றார்.
'அதேவேளை நல்லெண்ண அடிப்படையில் இதுவரை தங்கள் சம்மதத்தை தெரிவிக்காத ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தங்கள் நிலைப்பாடுகளைத் தெரிவிக்க 17.10.2018 கடிதம் மூலம் கால அவகாசம் வழங்கியுள்ளோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், தேர்தல் திணைக்களத்தினால் இதுவரை அங்கீகரிக்கப்படாத தமிழ் அரசியல் கட்சிகளுடனும் மற்றும் தேசியக் கட்சிகளில் இணைந்து அரசியல் செய்கின்ற தனிப்பட்ட அரசியல் செயற்பாடுகளுடனும் எமது முயற்சிகளுக்கு அவர்களது ஆதரவையும் பெற்றுக்கொள்ளும் வகையில் விரைவில் நல்லெண்ணப் பேச்சுவார்த்தைகளைக் கிழக்குத் தமிழர் ஒன்றியம் மேற்கொள்ளவிருக்கிறது" என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் பின்னால் கிழக்கு மாகாணத் தமிழர்கள் அனைவரும் அணி திரள வேண்டுமென்றும் கிழக்கு மாகாணத்துக்கு வெளியேயுள்ள தமிழர்களும் தங்கள் ஆதரவைக் கிழக்குத் தமிழர் ஒன்றியத்துக்கு வழங்க வேண்டும் என்றும் அதற்கு ஊடகங்களும் முழு ஒத்தாசை புரிய வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்



## களியாட்டங்களை முடிந்தவரை தவிர்த்து சமூக சேவைகளை நோக்கி நகரும் தாந்தோன்றீஸ்வரர் விழா

'முழங்கால் புதையும் மண்ணில் தேரோட்டம், பார்த்தவர்கள் கண்ணில் நீரோட்டம். வருடாந்தம் தேரோட்டத்தினாலே மகிமை பெறுகிறது கொக்கட்டிச்சோலைப் பிரதேச'மென சுப்பிரமணியமும், பாலகிருஸ்ணனும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் முன்வாயிலில் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

புதிது, புதிதாக எத்தனை ஆலயங்களை அமைத்து, புதிய தேர்கள் வருடமொருமுறை வலம் வந்தாலும், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்டத்திற்கு ஈடாகாதென்பதனை ஆணித்தரமாக கூறுகின்ற சொற்பதமே, ஆலயவருடாந்த மகோற்சவத்தினை தேரோட்டம் என அழைப்பதாகும். இற்றைவரை மகோற்சவத்தினை தேரோட்டம் ஆரம்பித்துவிட்டது என்று கூறுகின்றமையே வழக்கிலிருந்து வருகின்றதாகும். இவ்வாறான ஆலயத்தின் சிறிய தேரும், சித்திரத்தேரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வலம் வந்திருந்தன. இத் தேரோட்டத்தினை கண்ணுற்று இன்புறுவதற்காக இலங்கை நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை தந்திருந்தமையை காணக்கூடியதாகவிருந்ததாக கூறிய சுப்பிரமணியம், வெளிநாட்டவர்களும், இலங்கை நாட்டில் உள்ள சகோதர இனங்களைச் சேர்ந்த மக்களும் ஆலய தரிசனத்தில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டார். தேர்களை ஆண் அடியார்கள் இழுத்த போது, மரத்தினால் செய்யப்பட்ட சக்கரங்கள் மண்ணில் புதைந்து, எழுந்து சென்ற காட்சிகள், தேரின் பாரத்தினையும், தேரின் பழமையினையும் எடுத்துக்காட்டியிருந்தமையுடன், மகிமையினையும் படமாக காட்டியிருந்தது.

தேனெடுக்க சென்ற வேடன் கொக்கட்டி மரத்தினை வெட்டிய போது, மரத்திலிருந்து குருதிபாய, குருதி பாய்ந்த இடத்தில் சிவலிங்கம் இருப்பதனைக்கண்டு, அவ்விடத்தில் பூசைகள் செய்து, வருகைதந்த பழமையும் மகிமையும் கூறும் ஆலயமே கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரம். இதற்கு ஆதாரம் சேர்க்கும் வகையில் கோபுரத்தின் முன்வாயிலில் இன்றும் தேன்கூடு அமைந்துள்ளது.

இவ்வருட தேரோட்ட நிகழ்வில் பெரும்பாலானவர்கள் பண்பாட்டு

### அதிரடி இசை நிகழ்ச்சிகள் தவிர்ப்பு, பட்டாசுகள் குறைவு, பாரம்பரியக் கலைகளுக்கு முன்னிடம்

உடைகளுடன் ஆலயத்தினை வழிப்பட்டிருந்தமை சிறப்பென்றாலும், சிலர் பண்பாட்டு உடைகளை அணியாமையும் கவலையானதே. ஆலய மகோற்சவ பூசைகள் வழமைபோன்று சிறப்புற்றிருந்த அதேவேளை, மேள இசை, பலரையும் பக்தியில் ஆழ்த்தியிருந்தது. கடந்த காலங்களை விட, இவ்வருடம் பெண் கலைஞர் ஒருவர் நாதஸ்வரம் வாசித்திருந்தமையும் சிறப்புக்குரியது. அதேவேளை மேளக் கச்சேரிகளும், திருமுறை ஓதுதலும் ஆலயத்தின் மகோற்சவத்தினை மேலும் சிறப்பாக்கியிருந்தன. காலையிலும், மாலையிலும் பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் பாடல் ஒலிக்கவிடப்படும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில், இப்பாடலுக்கான இசையமைப்பின் போது, நாதஸ்வரம், மேளம் இசைத்த கலைஞர்கள் பூசை ஆராதனைகளின் போது, மேளம், நாதஸ்வரம் வாசித்திருந்தமை மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றிருந்தது. அதேவேளை இப்பாடலை பாடிய பாடகர் சாந்தன் மண்ணைவிட்டு அகன்றுவிட்டவேளையிலும், அவரது மகன் அப்பாடலை தனது தந்தையின் குரலிலே ஆலய முன்றலில் பாடி பலரது பாராட்டையும் பெற்றிருந்தார்.



ஆலயங்கள் ஆடம்பரச் செலவுகளை மேற்கொள்வதினால் பெருமளவிலான பணங்கள் வீணடிக்கப்படுவதாக கூறப்படுகின்ற நிலையில், இசைநிகழ்ச்சிகளுக்கும், பட்டாசுகளுக்காகவும் செலவு செய்யப்படும் செலவீனங்கள் குறைக்கப்பட்டு, சமூகசேவைகளுக்காக அவை வழங்கப்பட வேண்டுமென்பது, தற்போதைய சமூகத்தின் கருத்தாகின்ற நிலையில், கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் கல்விக்காக பல உதவிகளை வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரித்தாகின்றது. அதேவேளை திருவிழா காலங்களில், திருவிழா உபயகாரர்களினாலும், ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையினராலும் இசைநிகழ்ச்சிகள் நடாத்தப்படாததுடன், கூத்து நிகழ்ச்சிகளும், கலைநிகழ்ச்சிகளுமே திருவிழாக் காலங்களை சிறப்பித்திருந்தன. அத்தோடு பட்டாசு கொளுத்தலும் கடந்த காலங்களை விட மிகுவாக குறைந்திருந்ததுடன், சில திருவிழாவின் போது ஒரிரு பட்டாசுகள் மாத்திரமே கொளுத்தப்பட்டிருந்தன. இதன்மூலம் சமூகசேவைக்கான அல்லது நிலையான வேலைகளுக்காக அப்பணம் சேமிக்கப்பட்டிருக்கின்றமை பாராட்டுக்குரியதென பாலகிருஸ்ணன் குறிப்பிட்டான்.

தேரோட்டத்தின் போது அரோகரா கோசங்கள் எழுப்பபட்டிருந்தாலும், கைகூப்பும் கரங்களில் தொலைபேசிகள் இருந்தன. பலரும் சமூக வலைத்தளங்களில் உடனுக்குடன் தேரோட்ட நிகழ்வுகளை பதிவிட்டிருந்தமையுடன், நேரடி ஒளிபரப்பினையும் மேற்கொண்டிருந்தனர். இதன் பயனாக வெளிநாடுகளிலும், ஆலயத்திற்கு வருகைதராதவர்களும் ஒளிபரப்புக்கள் மூலமாக தேரோட்டத்தினை பார்த்து மகிழந்தனர்.

படுவான்கரை மண் வந்தாரை வரவேற்று வயிறாற உணவளித்து அனுப்பும் பண்பாட்டு பழமைமிகு பகுதியென்பதனை நிருபிக்கும் வகையில், ஆலயத்தினைச் சுற்றியிருந்த அனைத்து மடங்களிலும் பகல், இரவு உணவுகள் வழங்கப்பட்டன. இதனால் ஆலயத்திற்கு வருகைதந்த அடியார்கள் பசியாறிச் சென்றனர். அடியார்களினால் உடலை வருத்தி நேர்த்திகள் நிறைவேற்றப்பட்டதுடன், உயிரினங்களும் நேர்த்தி அளிக்கப்பட்டன. அவ்வாறு நேர்த்தி அளிக்கப்பட்ட உயிரினங்களை உடனக்குடன் விற்காது, ஆலய மகோற்சவம் நிறைவுபெற்றதன் பின்பு விற்குமாறும் விமர்சனங்கள் வெளியாகிருந்தன. ஆலய மகோற்சவத்தின் இறுதிநாளில் விற்பனை நிலையங்கள் பல அமைக்கப்பட்டிருந்தன. ஆனாலும் தீர்த்தம் நிறைவுபெற்ற மறுநாள் பொலித்தீன்களினால் ஆலயம் நிரம்பியிருந்தது.

முனைக்காடு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்தில் திருவேட்டை நிகழ்வு வழமைபோன்று

### படுவான் பாலகன்

நடைபெற்றது. இதன்போது, பாடசாலை மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளுடன், ஊர்வலம் திருவேட்டை இடத்தினை அடைந்தமையுடன், கடந்த காலங்களைவிட திருவேட்டை நிகழ்வுகளில் வித்தியாசமான வேட்டை முறைகளும் நடைபெற்றிருந்தன.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் நிறைவுபெற்றிருக்கின்றது. இதன் மூலமாக பல்வேறு படிப்பினைகள் வெளிப்பட்டிருக்கின்றன. பல முன்னுதாரணமான செயற்பாடுகளும் நடந்தேறியிருக்கின்றன. அதேவேளை உறவுகளை ஒன்றிணைக்கும் இடமாகும் தேரோட்டம் அமைந்து சிறப்பாக்கியிருந்தமை மிகவும் பாராட்டுக்குரியதென கூறிய சுப்பிரமணியம் மணற்பிட்டியை நோக்கி சென்றான்.

---

தொடர்ச்சி...

## கலித்தொகை இன்பம்

கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி நோதக்க செய்யும் சிறு பட்டி, மேலோர் நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லீரே!
உண்ணுநீர் வெட்டேன்' என வந்தார்க்கு, அன்னை
அடர்பொன் சிரகத்தால் வாக்கிச் சுடர் இழாய்!
உண்ணுநீர் ஊட்டி வா என்றாள், என யானும்
தன்னை அறியாது சென்றேன் மற்று என்னை
வளைமுன்னை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்! என்றேனா
அன்னை அலறிப் படர்தரத், தன்னை யான்,
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி, நகைக் கூட்டம்

செய்தான் அக்கள்வன் மகன்."

(கலித்தொகை. குறிஞ்சித்திணை. பாடல் 15. பாடியவர்: கபிலர்)

(கன்னிப் பெண் ஒருத்தியைக் காதலிக்கும் ஒருவன் அவளைப் பார்ப்பதற்காக அவளது வீட்டுக்கு வந்து தண்ணீர் கேட்பதையும், அவளது கையைப் பிடிப்பதையும், அவளது மனதைக் கவர்வதையும், அவள் தாயிடம் பொய்கூறி மழுப்புவதையும் அவள் ஒரு கதை போலத் தன் தோழியிடம் கூறுவதாக அமைந்தது இந்தப்பாடல்)
இதன் நேரடிக் கருத்து:

ஒளிபொருந்திய வளையலை அணிந்திருப்பவளே கேள்! சிறுவயதில் நாம் வீதியிலே வீடுகட்டி விளையாடிக்கொண்டிருந்தபோது அந்த மணல் வீடுகளைத் தன் காலால் சிதைத்து, நாம் தலையில் சூடியிருந்த கோதையைப் பிய்த்து, நாம் விளையாடிக்கொண்டிருந்த பந்தை பறித்துக்கொண்டு ஓடி நம்மையெல்லாம் நோகப் பண்ணினானே, அவன், ஒரு நாள் நானும் அன்னையும் வீட்டில் இருந்தபோது அங்கே வந்து தாகத்திற்குத் தண்ணீர் கேட்டானடி. அதைக்கேட்ட என்தாய் வாசலில் யாரோ தண்ணீர் கேட்கிறார்கள் பொன்தகட்டால் செய்யப்பட்ட கலசத்திலே தண்ணீர் நிரப்பி அவருக்குக் கொடுத்து வா என்று சொன்னாள். வந்திருப்பது அவன்தான் என்று அறியாமல் தண்ணீர் கொண்டு சென்றேன். அவனோ எனது கையைப்பிடித்து இழுத்தான். நான் நடுங்கிக்கொண்டே, 'அம்மா இவன் செய்யும் வேலையை வந்து பார்' என்று கத்தினேன். அன்னை அலறிக்கொண்டு ஓடிவந்தாள். (அவன் செய்ததைச் சொன்னால் அவனை அடித்து அவமதித்துத் துரத்திவிடுவார்களே, அதனால்) "அம்மா தண்ணீர் குடித்தபோது அவன் விக்கல் எடுத்தான் அதுதான்..." என்று மழுப்பி உண்மையை மறைத்தேன். நடந்ததை அறியாத அன்னை அவனது முதுகைத் தடவிக்கொடுத்தாள். அப்போது, என்னை கடைக்கண்ணால் கொல்வது போலப்பார்த்துப் பின் நகைத்தானடி அந்தக் கள்வன்மகன்!






# 'திரித்துக்' கூறப்பட்ட வரலாற்றைத் 'திருத்திக்' கூறும் திரைப்படம்

இத்திரைப்படத்தின் வெள்ளோட்டக் காட்சிக்கு வந்த அழைப்பினை ஏற்று, போயிருந்தேன்.
கண்டியினை ஆண்ட நாயக்கர் வம்சம், நயவஞ்சகத்தால் அழிந்தொழிந்த கதை. 'ஹங்குரங்கெத' பிரதேசத்தில் விவசாயக்குடும்பத்தில் பிறந்த 'கண்ணுச் சாமி', எனும் இளைஞன், ஸ்ரீவிக்ரம ராஜசிங்கனாக்கபட்ட கதையையும், மதவாதம், இனவாதம் என்ற பேரில், பேரினவாதிகள் தம் சுயநலத்திற்காக எவ்வாறெல்லாம் சூழ்ச்சிகள் செய்து அம்மன்னனைப் பலிகடாவாக்கினார்கள் என்பதையும், வரலாற்று ஆசிரியர்கள் எவ்வாறெல்லாம் பொய்யுரைத்து அவனைக் கொடுங்கோலனாகச் சித்தரித்துள்ளார்கள், அவனது உண்மையான குண இயல்புகள் என்ன, என்பதையெல்லாம் மிக நேர்த்தியாகவும் நெகிழ்ச்சியோடும் சித்தரித்திருந்தார்- திரைக்கதாசிரியரும் இயக்குனருமான திரு. Daevinda Kongahage.

தமிழில் பேசவேண்டிய கதை மாந்தர்கள் தமிழிலேயே பேசினார்கள். பிரித்தானிய பாத்திரங்கள் ஆங்கிலத்திலேயே பேசினார்கள். பெரும்பாலான உரையாடல்கள் சிங்கள மொழியில் அமைந்திருந்தாலும், இதனை ஒரு மும்மொழித் திரைப்படம் என்றுதான் வகைப்படுத்தவேண்டும்.

கண்ணுச்சாமி என்ற ஸ்ரீவிக்ரம ராஜசிங்கனாக நடித்த Pubudu Chathuranga நிறைவாகவே அந்த பாத்திரத்திற்கு உயிரூட்டினார். மகாராணி ரங்கநாயகி பாத்திரமேற்ற நிரஞ்ஜனி ஷண்முகராஜாவுக்கு இது ஒரு மிகப்பெரிய அங்கீகாரம் என்றுதான் சொல்லவேண்டும். விழாவில் திரைப்படக்குழுவினர் அவருக்களித்த முக்கியத்துவம் கலைஞர்கள் மத்தியில் 'வேற்றுமையிலும் ஒற்றுமை' பேணுவதற்கு முன்னுதாரணமாயிருந்து. நிரஞ்சனியும் அப்பாத்திரத்தை மிகுந்த தேர்ச்சியுடன் சித்தரித்திருந்தார்.

**B.H. அப்துல் ஹமீத்**

தமிழகத் திரைப்படங்களிலும் கூட, பாடல்கள் இயற்றிய பெருமைக்குரிய, நமது மண்ணின் கவிஞர் 'பொத்துவில் அஸ்மின்' தனித்தமிழ் வரிகளில் ஒரு முழுப்பாடலையே இயற்றியிருந்தார். மீனா பிரியதர்ஷனி என்ற இளம் சிங்களப்பாடகி தெளிவான உச்சரிப்புடன் இனிமையாகவே பாடி, அஸ்மினுக்குப் பெருமை சேர்த்திருந்தார்.


வரலாற்றுத் திரைப்படங்களென்றாலே, அரண்மனை, அந்தப்புரம், யுத்தக்காட்சிகளையெல்லாம், கற்பனைக்கெட்டாத அளவு, பலமடங்கு மிகைப்படுத்தியும் Graphics உத்திகள் மூலம் பிரம்மாண்டப்படுத்தியும் காட்டுவார்கள். உண்மையில் அன்றைய மக்கள் தொகையினைக் கணக்கிட்டால் சில நூற்றுக்கணக்கில் மட்டுமே போர் வீரர்கள் இருப்பார்கள், பழங்காலத்து அரண்மனைகள் (இப்போதும் சில பேணப்பட்டுள்ளவை போன்று) அப்போது உண்மையில் எப்படி இருந்திருக்கும் என்பதையெல்லாம் மிக இயல்பாக சித்திரித்திருந்தார்கள். எந்தவொரு இனத்தையும் கொச்சைப் படுத்தாமல் அதேவேளை பெரும்பான்மை இனத்தில் அன்றிருந்த சந்தர்ப்பவாதிகளைத் தோலுரித்துக் காட்டிய துணிச்சல் பாராட்டிற்குறியது. தனக்குத் துரோகமிழைத்த 'எகலப்பலை'யின் குழந்தைகளைப் பெற்ற தாயைக்கொண்டே உரலில் போட்டு இடிக்கவைத்த 'கண்டிய மன்னன் கதையை', நடிகர்திலகம் கூட ஒரு திரைப்படத்தில் நாடகமாக நடித்திருப்பார். அவை எல்லாம் எவ்வளவு பச்சைப் பொய் என்பதை, இயக்குனர் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார். திரைப்படம் நிறைவடையும் போது சூழ்லைநிலைக் கைதியாக மாறிப்போன கண்ணுச்சாமின் மேல், நம் எல்லோரையும் அனுதாபம் கொள்ள வைத்ததில்- இயக்குனர் வெற்றியடைந்துள்ளார்.

மிக முக்கிய விடயம்- திரைப்படத்தின் நிறைவில் பின்னணியில் ஒலிக்கும் குரல் மூலமாக -'பேரின வாதிகளாய் செயல்பட்ட S.W.R.D. பண்டாரநாயக்க மற்றும் J.R.ஜயவர்தன இருவரும் பூர்வீக 'வேர்கள்' என்ன என்று சுட்டிக்காட்டிய அசாத்தியத் துணிச்சலுக்காக, இயக்குனர் Daevinda Kongahage அவர்களுக்கு ஒரு பூங்கொத்து வழங்கிப் பாராட் டவேண்டும். இனப் பாகுபாடின்றி எல்லோருமே, ஒருமுறை பார்க்கவேண்டிய திரைப்படம்.

(திரைப்படம் பார்க்கப் புறப்பட்ட வேளையில், கண்டிய மன்னனின் கொள்ளுப்பேரன் இவர்தான் என, என் மனைவி ஒரு நிழல் படத்தைத் தேடி எடுத்துத் தந்தார்- அதனையும் இங்கு இணைத்துள்ளேன்- என் மனைவி சிறுவயதாயிருக்கும்போது அவர்கள் இல்லத்தில் நடந்த விருந்துக்கு, குடும்ப நண்பர் என்ற வகையில் வந்திருந்தாராம் - நீண்ட மீசையுடன் இருப்பவர்)

# ரிஷி பஞ்சமி : கொட்டகைகளில் அடைக்கப்படும் பெண்கள்

# பெண்களுக்கு எதிரான இந்தக் கொடுமையை சட்டம் மாற்றுமா?



மாதவிடாய் காலத்தில் பெண்களைத் தனிமைப்படுத்துவது குற்றம் என்று நேபாள நாடு சென்ற மாதம் அறிவித்தது. அப்போது அந்தச் செய்தியை முகநூலில் பகிர்ந்துமிருந்தேன்.

பெண்களைத் தனிமைப்படுத்துவதற்காக வீட்டுக்கு வெளியே கொட்டகை அமைத்துவைத்திருப்பதை இங்கு நேபாளம் வந்த பிறகே பார்த்தேன். இந்தக் கொட்டகைகள் "சாவுபாடி" என அழைக்கப் படுகின்றன. கோழி, ஆடு, மாடுகளை வளர்க்கும் கொட்டைகைகளில் விலங்குகள், பறவைகளுடன் தனிமைப்படுத்துவது, அல்லது விலங்குகளுக்கானவை போன்ற சிறு கொட்டகைகளை அமைத்துத் தனிமைப்படுத்துவதே வழக்கம்.

பெண்கள், சிறுமிகள் மாதவிடாய் காலத்தில் இந்தக் கொட்டகைகளை விட்டு வெளியே வருதல்கூடாது. முக்கியமாக ஆண்களுக்கு எதிரே வரக்கூடாது. சூரிய ஒளியைக்கூடத் தரிசிக்கக்கூடாது. இவர்களுக்கான பாத்திரங்கள் வேறு. உணவு வேறு. மாதவிடாய் காலத்தில் நல்ல ஆரோக்கியமான உணவுகள் உண்ணக்கூடாது.

ஆண்களின் எதிரில் வந்துவிட்டால் அந்த ஆணின் ஆயுள் குறைந்து விடும் அல்லது அவன் வாழ்வில் கெடுதல் நடந்துவிடும் என்பதாக நம்பப்படுகின்றது.

ரிஷி பஞ்சமி எனப்படும் இந்து நாட்குறிப்பில் வரக்கூடிய நாளில் நேபாள அரசு பணிபுரியும் பெண்களுக்கு விடுமுறை வழங்குகிறது. இந்த நாளில் பெண்கள் தங்களது பெண்ணுறுப்பை 365 முறைகள் கழுவித் துப்புரவாக்கவேண்டும். இந்த வழக்கம் இந்துக்களின் உயர் சாதிப் பெண்களுக்கு மட்டுமே உரிய ஒன்றாக இருந்து, காலப்போக்கில் எல்லாப் பெண்களுமே கடைப்பிடிக்கும் ஒன்றாக மாறியிருக்கிறது. ஆற்றுமண், குருத்து மண், களிமண் போன்ற பலவித மண்களைக் கலவையாக்கி எடுத்து ஆற்றுக்குச் சென்றே 365 முறைகள் யோனியைத் துப்புரவாக்கவேண்டும். அத்தோடு 365 முறைகள் மிஷ்வாக் குச்சிகள் கொண்டு பற்களைத் துப்புரவாக்கவேண்டும்.

இந்த வழக்கங்கள் சமூக உட்பிரிவுகள், வகுப்புகளுக்கு அமைய சிறு வேறுபாடுகள் வேறு பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றன. ஆனால் சமூகத்தவர்களிடம் இது புழக்கத்தில் உள்ளது.

மாதவிடாய் காலத்தில் பெண்களைத் தனிமைப்படுத்தி வைக்கும்போது விலங்குகள் தாக்கியும் குளிர் தாளாமலும் பல பெண்கள் இறந்துள்ளனர். தனிமைப்படுத்தப்பட்ட கொட்டகைகளில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளானதும் உண்டு.



**நேபாளத்தில் இருந்து
ஷர்மிளா செய்யத்**

நீண்ட காலமாக நேபாள நாட்டுப் பெண்கள் அமைப்பு நடத்திவந்த போராட்டங்கள், அழுத்தங்களின் பலனாக நேபாள அரசு மாதவிடாய் காலத்தில் பெண்களைத் தனிமைப்படுத்துவது குற்றம் என்றும், ரிஷி பஞ்சமி விடுமுறை இனி இல்லை என்றும் அறிவித்தது. ஆனால் வழக்கங்களில் ஊறிப்போன மனித சமூகம் சட்டங்களால் எளிதில் மாறுவதில்லை.

தொடர்ச்சி...

## தோட்டத்துறையில் சிங்கள மக்களை உள்நுழைக்க சிறிமா செய்த திட்டம்

செய்வதற்கு எதிராகவும் வேலை வாய்ப்பு பெறுவதை தடுக்கும் வகையில் சட்டத்தினை கையாள அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை தெரியவருகிறது. //காணிக்கொள்வனவு செய்வதைக்கட்டுப்படுத்தும் முகமாக ஏற்கனவே பாராளுமன்றத்தில் சட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் இலங்கையர் அல்லாதவர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதை மட்டுப்படுத்துவதற்கான ஒரு சட்டமூலம் விரைவில் அறிமுக்கபடுத்தப்படவுள்ளது// தேசிய அடையாள அட்டை அறிமுக்கபடுத்துவதன் ஊடாக இந்திய வம்சாவளி தமிழர்களை வேறுபடுத்தல். //18 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் அடையாள அட்டை விநியோகிப்பதன் மூலம் சட்ட விரோத குடிவருவோர் தொல்லைகளை இல்லாதொழிக்க அரசாங்கத்திற்கு உதவும் மூன்றாவது சட்டமூலம் ஒன்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது//. இலங்கையில் எல்லோருக்கும் தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தின் இறுதியில் V எழுத்து குறிக்கப்பட இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர் பலருக்கும் இலக்கத்தின் இறுதியில் X என்ற எழுத்தே வழங்கப்பட்டுவந்துள்ளது. அது இலங்கையில் அவர்கள் முழுப்பிரஜைகள் இல்லை என்பதை காட்டுவதற்கான அடையாளமாகும். மிக அண்மைக்காலமாகவே இதற்காக பாராளுமன்றில் குரல் எழுப்பி எல்லோருக்கும் பொதுவான அடையாள அட்டையை இலக்கங்களுக்கு பின்னால் எழுத்துக்கள் ஏதுமின்றி எல்லோரையும் போல மலையகத் தமிழ் மக்களும் பெற்று வருகின்றனர்.

( தொடரும்... )

# "பயனியர் நாதன்" எனும் விராகநாதன்

மட்டக்களப்புக் கோட்டையில் இருந்து வாவிக்கு அப்பால் நேராகத் தெரியும் தெருக்களில் பயனியர் வீதி முக்கியமானது. பாண்டிருப்பில் பிறந்து, அந்த வீதியில் திருமணத்தின் பின் வாழ்ந்ததால் சீனித்தம்பி விராகநாதன் அவர்களுக்கு "பயனியர் நாதன்" என்ற புனைபெயர் பிடித்துப் போய்விட்டது.

சுவாமி விபுலானந்தருக்குப் பிறகு விஞ்ஞானமும், கணிதமும், தமிழ் புலமையும் கலந்து பிறந்த மட்டக்களப்பின் மைந்தர்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

அப்படியானவர்களில் ஒருவர் இந்த விராகநாதன்.

ஒருபுறம் பார்த்தால் இலங்கை புகையிரத திணைக்களத்தில் மிக உயர்ந்த அதிகாரி. திணைக்கள தலைமைக்கு அடுத்த இடத்தில், போக்குவரத்து இயக்க உயர் அத்தியட்சகராக பணியாற்றியவர் இவர்.

1922இல் பிறந்த இவர், லண்டன் பிஎஸ்சி வரை கற்றுத் தேறியவர். மிகவும் நுட்பமான ஆங்கில அறிவு படைத்தவர். மறுபுறம் தமிழ் இலக்கிய அறிவில் மிகவும் சிறந்தவர். தந்தை வழி வந்த தமிழ் மற்றும் சைவ அறிவு பூரணமாக இருந்தாலும், இவரை வெறுமனே ஒரு மத அறிஞர் என்ற கட்டுக்குள் அடக்கிவிட முடியாது.

இவரது தொழில் ரீதியான திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு, அணிசேரா (கூட்டுச் சேரா) நாடுகள் மாநாடு இலங்கையில் நடைபெற்ற தருணத்தில் நிரூபணமானது. இலங்கையில் இதுவரை நடந்த மிகப்பெரிய மாநாடுகளில் அதுவும் ஒன்று. உலகின் பல பாகங்களிலும் இருந்து நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்ட மாநாடு அது. அப்போது அந்த தலைவர்களின் விமானங்கள் வந்திறந்திய பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தின் போக்குவரத்து கட்டுப்பாட்டு பிரிவின் தலைவராக செயற்பட்டவர் விராகநாதன். வெற்றிகரமாக குழப்பங்கள் இன்றி விமான நிலைய போக்குவரத்தை நடத்திக்காட்டினார். இது மட்டக்களப்பார்கள் பெருமையாக சொல்லிக்கொள்ளக்கூடிய ஒரு சாதனை.

**பூபாலரட்ணம் சீவகன்**

மறுபுறம் தமிழில் அறிவியல் கவிதைகளை எழுதிய பெருமையும் இவரைச் சேரும். பரிசோதனைக்குழாய் மூலம் குழந்தைகளை பெற்றுக்கொள்ளும் முறை அறிமுகமான போது. அது கடவுளின் இயற்கைச் சக்திக்கு முரணானது என்ற வாதமெல்லாம் இங்கு முன்வைக்கப்பட்டு, கவிதைகளும் கட்டுரைகளும் பத்திரிகைகளில் வந்தன. அவற்றை நிராகரித்து "பரிசோனைக்குழாய் பாவை" என்ற பெயரில் கவிதை எழுதி, புதிய அறிவியல் கண்டுபிடிப்பை வரவேற்றவர் பயனியர் நாதன்.



'அயன் செய் தொழிலை அலட்சியம் செய்து

பயன்படப் பரிசோதனைக் குழாயில்
வைத்திய நிபுணர் வழம்படச் செய்த
பரிசோதனையின் பிரதி பலனாய்
"பாலோப்பியன்" பழுதுற்றதினால்

பாலுறவாலே பாலன் தரியாது

அல்லும் பகலும் அயனை நம்பி

எல்லையில் தொல்லை எண்ணி எண்ணி

ஒன்பது வருடம் ஒதுங்கிக் கழித்த

மெல்லியலாள் பிரவுண் மாது

விரும்பியபடியே வெளியே எடுத்த

கருவின் முட்டை கணவன் பகுதியிற்

கணக்கிட்டெடுத்து கலக்க வைத்து

செயற்கை முறையில் செய்த கருவை

இயற்கை வடிவாய் இயங்க வைக்க

கயல்விழி மாதின் கர்ப்பப் பைக்குள்

காலமும் நேரமும் கணக்கிட்டறிந்து

மலரவன் நாணி மறைந்து நிற்க

வைத்தனர் வைத்திய நிபுணர் ஆங்கு

ஐயிரு திங்கள் அதன்பின் கழிய

ஆயிரத் தொளாயிரத் தெழுபத்தெட்டின்

ஆடியில் தேதி இருபத்தைந்தில்
பத்தாயிரம் பணத்தொகையோடும்

பாரில் உதித்தாள் பலரும் வாழ்த்த

பரிசோதனைக் குழாயின் பாவை."

இது அவரது அறிவியல் கலந்த இலக்கியப் பணிக்கு ஒரு சோற்றுப் பதம்.

தமிழர் நலன் மீதும் நிறைந்த அக்கறை கொண்டவர் விராகநாதன்.

1977 ஆவணியில் கலவரம் ஒன்று முஸ்தீபாகியிருந்த தருணத்தில் அநுராதபுரத்தில் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடிய நிலையிலிருந்த யாழ்தேவி புகையிரதத்தை, குருணாகலோடு திருப்பி கொழும்புக்கு அழைத்தெடுத்த பெருமையும் இவரைச் சேரும் என்பார்கள். இப்படியாக இலைமறை காயாக இருந்துவிட்டுப் போன ஒரு கிழக்கின் மகன் இவர். இன்னும் ஆழமாகப் பேசப்பட வேண்டியவர்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 21

2000 ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப் பெற்றது. தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் தனித்தனியே தேர்தலிலே போட்டியிடுவதற்குத் தங்களை தயார் படுத்தத் தொடங்கின. அம்பாறை (திகாமடுள்ள தேர்தல் மாவட்டம்) மாவட்டத்தைப் பொறுத்த வரை ஒன்றுக்குப் மேற்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள் அங்கு போட்டியிடுமாயின் அம்பாறைமாவட்டத் தமிழர்களுக்கு என்று சாத்தியப்படக் கூடிய ஒரேயொரு பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் அடிபட்டுப் போகக் கூடிய ஆபத்தே உள்ளது.

இந்த விடயத்தில் கடந்த கால அனுபவங்களை மீட்டு பார்த்தல் வாசகர்களுக்கு கூடிய விளக்கத்தை தரும்.

விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலான 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் அம்பாறைமாவட்டத்தில் அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தின் கீழ் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எப், ரெலோ, ஈ. என். டி. எல். எவ் ஆகிய தமிழ்க்கட்சிகள் இணைந்து ஓரணியாகப் போட்டியிட்ட காரணத்தாலும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக புலிகளின் பின்னணியிலும் ஆதரவிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுயேச்சைக் குழுக்களாகப் போட்டியிட ஈ. ரோஸ் இத் தேர்தலில் புரிந்துணர்வோடு அம்பாறைத் மாவட்டத்தைத் தவிர்த்துக் கொண்டதாலுமே இத் தேர்தலில் அம்பாறைமாவட்டத் தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம்



**தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்**

காப்பாற்றப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணிப் பட்டியலில் ரெலோ சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பெற்ற ஜெ. திவ்வியநாதன் தெரிவானார்.

அடுத்து வந்த 1994 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மாவை சேனாதிராசாவைத் தலைமை வேட்பாளராகக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியும், இப் பத்தி எழுத்தாளரைத் தலைமை வேட்பாளராக கொண்டு அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கச் சுயேச்சை குழுவும், ரெலோ, புளொட், ஈரோஸ் இணைந்த கூட்டணியும் என மூன்று அணிகள் போட்டியிட்ட காரணத்தால் தமிழர் வாக்குகள் சிதறுண்டு அம்பாறைத் மாவட்டத் தமிழர்களுக்குரிய ஒரேயொரு பாராளுமன்றப் பிரதி நிதித்துவமும் பறிகொடுக்கப்பட்டது.

இதனால் 1989 ஆம் ஆண்டுப் பொது தேர்தலில் ஒரேயொரு ஆசனத்தையே பெற்றுக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு (எம். எச். எம் அஸ்ரப் மற்றும் யூ. எல். முகைதீன் (தொப்பி முகைதீன்) ஆகிய இருவரும் தெரிவானார்கள்.) இத்தகைய அனுபவப் பின்னணியில் 1994 ஆம் ஆண்டுப் பொது தேர்தலில் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு நேர்ந்த அவலம் மீண்டும் 2000 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் நேர்ந்துவிடக்கூடாது என ஆதங்கம் கொண்ட அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசங்கத்தினர், குறைந்த பட்சம் அம்பாறை மாவட்டத்திலாவது சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஓரணயில் போட்டியிட வைப்பதற்கான அரசியற் செயற்பாடுகளை முன்னெடுத்தது.

அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் சார்பில் சகல தமிழ் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்தும் பொறுப்பு அவ் அமைப்பின் மாவட்ட இணைப்பாளரான இப்பத்தி எழுத்தாளரிடம் ஒப்படைக்கப் பெற்றது.

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் வேண்டுகோளுக்குச் சம்மதித்து ஆதரவளிக்க முன் வந்தன. ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் கோரிக்கையைப் பரிசீலித்து முடிவு சொல்வதாக நாட்களைக் கடத்தி கொண்டிருந்தது. அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக விளங்கிய இரா. சம்பந்தன் அவர்களுடன் அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் மாவட்ட இணைப்பாளரான இப்பத்தி எழுத்தாளர் தொடர்ந்தேர்ச்சியான உரையாடல்களைத் தொலைபேசி ஊடக மேற்கொண்ட படியே இருந்தார். இடையிடையே மாவை சேனாதிராஜாவுடன் ஜோசப் பரராஜாசிங்கம் அவர்களுடனும் தொலைபேசி உரையாடல்களை மேற்கோண்டு அம்பாறைமாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் கோரிக்கைக்கு ஆதரவு அளிக்கும்படி யாசித்தார். இந்த மூவரும் ஆளை ஆள் சாட்டி போக்கு காட்டி, நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தார்களே தவிர முற்று முழுவதுமான முடிவைச் சொல்லவில்லை. காலம் இழுத்தடிக்கப் பட்டுக்கொண்டிருந்தது. இப்படி இருக்கும் போது அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணி மாபெரும் அரசியல் தவறொன்றை மீண்டும் அம்பாறைமாவட்டத் தமிழர்களுக்கு இழைத்தது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் கடைசி தினம் ஒரு திங்கட்கிழமையாயின் அதற்கு முந்திய வாரத்து வெள்ளிக்கிழமையன்று இப்பத்தி எழுத்தாளர் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் அவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டிருந்த சமகாலத்திலயே எந்த முடிவையும் சொல்லாமல் மட்டக்களப்பு மாவட்டத்தின் தேற்றாதீவை சேர்ந்தவரும் அக்கரைப்பற்றில் மணமுடித்து, அங்கு உதவி வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டு வசித்து வந்தவருமான தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியலிலோ அல்லது அதற்கு முந்திய தமிழரசுக் கட்சி அரசியலிலோ என்றுமே தலை காட்டாத தயானந்தா ராஜா என்பவரைத் தலைமை வேட்பாளராகக் கொண்டு வேட்புமனுவை அம்பாறை

தொடர்ச்சி... (பக்கம் -15 )



# மலைகளைப் பேசவிடுங்கள்

# தோட்டத்துறையில் சிங்கள மக்களை உள்நுழைக்க சிறிமா செய்த திட்டம்

**மல்லியப்புசந்தி திலகர்**

இலங்கை - இந்திய அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் ( சிறிமாவின் அறிக்கை தொடர்ச்சி )

இலங்கை பிரசாவுரிமை வழங்கப்பட உள்ளவர்களின் பெயர்களையும், இந்தியாவுக்கு (தாயகம்) அனுப்பப்படவுள்ளவர்களின் பெயர்களையும் உள்ளடக்கிய இரண்டு பதிவேடுகள் பேணப்படவேண்டும். இந்த வருடம் செப்தெம்பரில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய அதிகாரிகள் தூதுக்குழு, இந்திய வம்சாவளியினருள் இலங்கைப் பிரசாவுரிமை வழங்கப்படவேண்டிய மற்றும் திருப்பி அனுப்பப்படவேண்டிய ஆட்களை தெரிவு செய்தலுக்கான அடிப்படையை பரிசீலித்தது. எனது அமைச்சில் பூரண தகவல்கள் உள்ளமையினால் அந்தஸ்து தீர்மானிக்கப்பட்ட 825000 ஆட்களினதும் பதிவுகளை தயார் செய்வதில் எவ்வித சிரமமோ தாமதமோ ஏற்படுமென நான் எதிர்பார்க்கவில்லை.

திருப்பி அனுப்பப்பட உள்ளவர்கள் தொழில் புரிபவர்களாக இருந்தால் திருப்பி அனுப்பப்படும் வரையில் அல்லது 55 வயதுவரும் வரையில் இதில் எது முதலில் நடைபெறுகிறதோ அதுவரைக்கும் பணியைத் தொடர அனுமதிக்கப்படுவார்கள். புறப்படும் போது, ஒரு குடும்பம் நாணயப் பரிமாற்று கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய தமது சொத்துக்கள் எல்லாவற்றையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். ஒரு குடும்பம் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படக்கூடிய சொத்துக்களின் அதிகூடிய அளவு ரூபா 4000/= விட குறைக்கப்படமாட்டாது.

ஒரு கூட்டுப் பொறிமுறையை ஏற்படுத்தவும், இந்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த உரிய செயன்முறைகளை உருவாக்கவும் இரு அரசாங்களினதும் அதிகாரிகள் மிகக் கிட்டிய ஒரு தினத்தில் சந்திப்பார்கள்.

1949 - 1964 வரையான 15 வருடகாலப் பகுதியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 184771 பேர் சுயவிருப்பில் நிரந்தரமாக 1954 ல் இருந்து செயற்பாட்டில் உள்ள திட்டத்தின் கீழ் இலங்கையை விட்டுச் சென்றார்கள். இவ்வொப்பந்தத்திற்கமைய, 1965 இன் ஆரம்பத்தில் இருந்து செயற்படும் திருப்பி அனுப்பும் திட்டத்தின் கீழ் 600000 க்கு மேற்பட்ட ஆட்கள் அடுத்த 15 வருடங்களில் தாயகம் திருப்பி அனுப்பப்படுவர்.

வருடாந்தம் 40000 இந்திய வம்சாவளியினரின் வெளியேறுகையானது தோட்டங்களிலும் ஏனைய பகுதிகளிலும் எமது மக்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். பின்வரும் விடயங்களில் இந்த இந்த ஒப்பந்தம் 1954 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை விட முன்னேற்றகரமானதாக உள்ளது.

(அ) திருப்பி அனுப்பப்படுவோருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்க உறுதியளித்ததன் மூலமும் கட்டாயமாக திருப்பி அனுப்பும் கொள்கையை ஏற்றுக்கொண்டதன் மூலமும் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி மக்கள் தொடர்பான தனது கடப்பாட்டை இந்திய அரசு அங்கீகரித்துள்ளது.

(ஆ) ஊக்குவிப்புகள் ஏதும் செலுத்தத் தேவையுமில்லை. ஒருவர் 55 வயதை அடையும் வரை திருப்பி அனுப்புதலை நிறுத்தி வைக்கவும் தேவையில்லை .

( இ) இப்பிரச்சினை தீர்வில் "நாடற்றோர்" என்ற எண்ணக்கரு பெரும் பிரச்சினையை ஏற்படுத்தாது.

இலங்கையரது நலனுக்காக மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்

இலங்கையர்கள் அல்லாதவர்கள் காணிக் கொள்வனவு செய்வதைக்கட்டுப்படுத்தும் முகமாக ஏற்கனவே பாராளு மன்றத்தில் சட்டமொன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அதேபோல் இலங்கையர் அல்லாத வர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதை மட்டுப்படுத்துவதற்கான ஒரு சட்டமூலம் விரைவில் அறிமுக்கபடுத்தப்படவுள்ளது. 18 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் அடையாள அட்டை விநியோகிப்பதன் மூலம் சட்ட விரோத குடிவருவோர் தொல்லைகளை இல்லாதொழிக்க அரசாங்கத்திற்கு உதவும் மூன்றாவது



சட்டமூலம் ஒன்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சட்ட விரோத குடிவருபவர்களுக்கு எதிரான நடைமுறைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்நோக்கத்தின் நிமித்தம் இராணுவம், கடற்படை ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற கையோரப் பிரதேசங்கள் திருகோணமலை, புத்தளம் ஆகியவற்றை தனது கிழக்கு, மேற்கு எல்லைகளாக கொண்டிருக்கும்.

( சிறிமாவின் அறிக்கைத் தொடரும் )

அடிக்குறிப்பு :

இந்த வார அறிக்கையின் படி இந்திய வம்சாவளியினரை திருப்பி அனுப்புவதன் ஊடாக உள்நாட்டு சிங்கள மக்களுக்கு பெருந்தோட்டங்களிலும் பிறதொழில் வாய்ப்புகளிலும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க சிறிமா எண்ணியுள்ளமை தெரியவருகின்றது. //தோட்டங்களிலும் ஏனைய பகுதிகளிலும் எமது மக்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும். // மலையக மக்கள் காணி கொள்வனவு

தொடர்ச்சி... (பக்கம் -04 )

---

# சீதையின் சீத்துவம் - தொடர்ச்சி 03

இலங்கையினின்றும் சீதை மீட்கப்பட்டு அயோத்தி அரண்மனையிலே அந்தப்புரத்தில் தனியறையில் இருக்கிறாள். அவளை, அடைந்த கைகேயி, 'இராவணன் என்ற மகா புருஷன் எப்படி இருப்பான்' என்று கேட்கவே, இராவணனுடைய உருவத்தை வரைந்து காட்ட விரும்பினாள். வரைந்து முடிக்கவும் அங்கே இராமன் எதிர்பாராமல் வரவும் சீதை திடுக்கிட்டவளாய் அதைத் தலையணையின் கீழே மறைக்க முயன்றாள். இதைக் கண்டு வெகுண்ட இராமன் அவளை நோக்கி "இன்னும் அவன் நினைப்பை விடவில்லையா சீதை! அவன் இறப்பிலும் அவன் உருவத்தை எழுதியாவது திருப்தியடைலாமென எண்ணுகிறாயா? என் முன் நில்லாதே மறைந்து போ! என்று கடிந்து பேசி இராமன் அவ்விடத்தை விட்டு வெளியேறுகிறான். (இந் நிகழ்ச்சி பாரம்பரிய கதையினின்றும் எடுக்கப்பட்டது. )"

வால்மீகியின் சீதைக்கு இராவணனே காதலன்? வாதாடினால் இராவாணனுக்காக! இதற்கென்ன பொருள்.

இராவணனை சீதை உண்மையிலேயே, விரும்பிருக்கவில்லையேல் அவன் உருவத்தை ஏன் வரைந்து கைகேயிக்கு காட்ட வேண்டும்? உண்மையாகவே சீதை இராவணனை வெறுத்து இருந்தால் கைகேயி இராவணனைப் பற்றி என்னிடம் ஒன்றும் கேட்க வேண்டாம். அவனால் நான் பெற்ற அல்லலெல்லாம் போதும். இனியும் பெற விரும்பேன். அவனைப் பற்றி எனக்கொன்றுமே தெரியாது என்று வெளிப்படையாக, தெளிவான முறையிலே கைகேயிடம் சீதை கூறியிருக்க வேண்டும். அவ்வாறின்றி கைகேயி கேட்ட மாத்திரத்தில் இராவணனின் உருவத்தை சீதை வரைய விரும்பியிருப்பாளாயின் இராமன் கூறியது போல இராவணன் இறந்த பின் அவன் உருவத்தை எழுதியாவது தன்னை அமைதி செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணந்தானே சீதையின் மனதிலே இருக்க வேண்டுமேயன்றி, வேறந்த எண்ணமும் இருக்க நியாயமில்லை. இதற்கு ஏற்றாற் போல் கைகேயியின்



கூற்றும் அமைந்துள்ளது. அவள் கூறுகிறாள் "மனிதருக்கு பிரியமான பொருள்களே அடிக்கடி நினைவுக்கு வரும். பெண்களின் மனதை அறிந்தவர்கள் யார்? என்கிறாள். (இக் கருத்து ஆனந்த இராமாயணம் ஜன்மம் மூன்றிலே காணப்படும்.) " எனவே அவன் உருவம் அவள் உள்ளத்தில் அடிக்கடி அசைக்க முடியாத அளவிலே இடம்பெற்றிருக்க வேண்டும், என்றுதானே நாம் எண்ண வேண்டியுள்ளது! இல்லையேல் இரவாணன் உருவத்தை படமாக வரைய வேண்டிய அவசியமில்லையே !

இலங்கைப் போர் முடிந்ததும் சீதையை உடனே அழைத்து வந்து தன் மனைவியாக மீண்டும் அன்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இராமன் மனம் எண்ணவேயில்லை. தன் மனைவியின் ஒழுக்கத்திலே இராமன் தீராத ஐயம் கொண்டான். இவ்வாறு ஐயம் இதுவரையில் அவன் உள்ளத்தை விட்டு அகலவேயில்லை. இந்தக் காரணத்தைக் கொண்டுதான் லவன், குசன் ஆகியோரைத் தன் மக்கள் என்று ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறான். சீதையை நோக்கிப் பலவாறு ஏசுகிறது. இராமன் கூறுகிறான்.

"நான் மானமுள்ள சத்திரியன் ஆகையால் செய்ய வேண்டிய கடமைகளை யெல்லாம் செய்தேன். இராவணன் செய்த தவறுக்காக அவனைக் கொன்றேன். மானங்காக்கவே உன்னை விடுதலை செய்தேனே தவிர உன்னிடம் மீண்டும் இன்பம் காண வேண்டும் என்ற கீழான நோக்கத்திற்கல்ல. கண்வலியால் வாதை படுகிறவனுக்கு சூரியன் ஒளி எவ்வாறு வேதனை தருமோ அது போல என்முன்னே நீ நிற்பது எனக்கு வேதனையைத் தருகிறது."

உத்தம குலத்திலே பிறந்த எவனாவது பல மாதங்கள் அன்னியன் மனையிலிருந்த ஒருத்தியை மீண்டும் மனைவியாக ஏற்றுக் கொள்ள விரும்புவானா? நீ உன் கற்பை இழக்காமல் இருக்க வகையேயில்லை போர்க்களத்தில் இராவணனது தேஜசைக் கண்டு நானே வியப்புற்றேன். நீ விரும்பிய இடத்திற்கு செல்லலாம். இனி உன்னை யாரும் தடுப்பாரில்லை. இவ்வாறு நான் கூறுவது எல்லாம் திடிரென ஆத்திரப்பட்டுக்கூறி வருந்துவதாக எண்ண வேண்டாம். இதை நான் தீர ஆலோசித்து தெளிந்த பின்னர்தான் கூறுகிறேன். நீ வேண்டுமானால் சுக்கிரீவன், இலக்குவன் போன்றவர்கள் பாதுகாப்பில் இருக்கலாம்" என்று இராமன் கூறுகிறான்.





இதற்கு சீதையால் அளிக்கப்பட்ட விடைகளையும் நாம் காண வேண்டும். அவள் கூறுகிறாள். "நீ என் மேல் இத்தகைய குற்றங்களையெல்லாம் கூறினாய், அவனோ பலவான்; அவனிடமிருந்து நானெவ்வாறு என்னைக் காப்பாzzzzzzzற்றிக்கொள்ள முடியும்? நீயாவது கர்பத்திலிருந்து தோன்றினாய், நானோ கர்ப்ப வாசனையே அறியாதவள். எனவே நான் தீக்குளிக்கும்போது கூற வேண்டியது யாது உளது ? மனத்தாலும் வாக்கலும் நான் தூயவள் என்பதைத் தவிர வேறொன்றும் கூறுவதற்கில்லை." என்று கூறினாள். சீதையின் கூற்றுப்படி அவள் தன் கற்பை இராவணனிடமிருந்து காப்பற்றிக்கொள்ளமுடியவில்லை என்பது தெளிவாகிறது.

(தொடரும்)

# விளையாட்டு

## மட்டுநகரின் கால்பந்தாட்ட வரலாற்றில் தனக்கென முத்திரை பதித்த ஜெயசூரியம்



மட்டுநகரின் கால்பந்தாட்டம் அதன் வரலாற்றில் 1970, 80 களில் தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெற்றதாக விளங்கியுள்ளது. இக்காலகட்டத்தில் தேசிய மட்டத்தில் நடைபெறும் கால்பந்தாட்டப் போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட அணி ஏனைய மாவட்ட அணிகளுக்குச் சவால் விடும் பலமான அணியாகத் திகழ்ந்துள்ளது. அத்துடன் அக்காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளின் (இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி) சுற்றுலா கால்பந்தாட்ட அணிகள் பலவற்றுக்குச் சவால் கொடுத்த இலங்கையின் ஒரு மாவட்ட அணியாகவும் மட்டக்களப்பு கால்பந்தாட்ட அணி திகழ்ந்துள்ளது.

இவ்வாறு பிரகாசித்த மட்டக்களப்பு மாவட்டக் கால்பந்தாட்ட அணியின் முன்கள வீரராகக் களமாடி கால்பந்தாட்ட இரசிகர்கள் பலரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட ஒரு வீரராகத் திகழ்ந்தவரே 'சீனியர்' என கால்பந்தாட்டத் துறையினைச் சார்ந்தோரால் கௌரவத்துடன் அழைக்கப்படும் திரு நாகையா ஜெயசூரியம் அவர்களாவார்.

1950 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 22 ஆந் திகதி மட்டுநகரில் பிறந்த இவர், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் கல்வி கற்றுள்ளார். பாடசாலைக் காலத்திலேயே கால்பந்தாட்டத்தில் ஆர்வங் காட்டிய இவர், பாடசாலைக் கல்வி நிறைவடைந்ததும் மட்டக்களப்பு "பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தில்" 1969 ஆம் ஆண்டு தனது 19 ஆவது வயதில் கால்பந்தாட்ட வீரனாக இணைந்து கொண்டு இன்று வரை அக்கழகத்தின் உறுப்பினராக இயங்கி வருகின்றார். தான் கல்வி கற்ற பாடசாலையின் கால்பந்தாட்டப் பயிற்றுனராக தற்சமயம் கடமையாற்றி வருகின்றார். இவருடைய பயிற்சியில் உருவாக்கப்பட்ட மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 16,17,18 வயதிற்குட்பட்ட கால்பந்தாட்ட அணிகள் பல போட்டிகளில் சம்பியனாகி பாடசாலைக்கும் மட்டுநகருக்கும் பெருமை சேர்த்து வருவதை நாம் சம காலத்தில் பார்த்தும் அறிந்தும் வருகின்றோம்.

இலங்கையில் தொலைக் காட்சி அறிமுகமாகிய 1982 களில் தேசிய விளையாட்டு விழாவில் கால்பந்தாட்ட இறுதி ஆட்டத்தில் கொழும்பு மாவட்ட அணியுடன் போட்டியிட்ட மட்டக்களப்பு மாவட்ட அணி 2:1 எனும் பேறுகளால் தோல்வியுற்று இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இப்போட்டி ஒளிப்பதிவு செய்யப்பட்டு முதல் தடவையாக தேசிய தொலைக் காட்சியில் (கறுப்பு வெள்ளை நிறத்தில்) ஒளிபரப்பப் பட்டிருந்தது. இப்போட்டியில் தேசிய வீரர்களைக் கொண்ட பலம் வாய்ந்த கொழும்பு மாவட்ட அணிக்கு எதிராக கோல் போட்ட மட்டக்களப்பின் நட்சத்திர வீரராக திரு.நா.ஜெயசூரியம் அவர்கள் தடம் பதித்துள்ளார்.

**துரைராஜா கௌரீசன்**

அக்காலத்தில் தமிழ், முஸ்லிம், பறங்கி எனும் பேதங்கள் எதுவுமின்றி தாம் மிகவும் நட்புடனும் ஒற்றுமையுடனும் கால்பந்தாட்டத்தில் ஈடுபட்டதனாலேயே தேசிய ரீதியில் பலமான அணியாகத் திகழ முடிந்ததாகவும், தமக்குக் கால்பந்தாட்டத்தை மிகவும் கண்டிப்புடன் பயிற்றுவித்த திரு ரெட்ணசபாபதி அவர்களையும் திரு. குசௌந்தரராஜன் அவர்களையும் மறக்க முடியாதுள்ளதாகவும் கூறுகின்றார்.

1990 களில் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் களமாட வேண்டிய புதிய தலைமுறையினர் மைதானங்களில் களமாட முடியாத அசாதாரண நிலைமை வலுப்பெற்று விளையாட்டுத் துறையில் குறிப்பாக கால்பந்தாட்டத்தில் வீரர்கள் இல்லாத ஒரு வெற்றிடம் உருவானபோது அவ்வெற்றிடத்தினை நிரப்பிய மூத்த வீரர்களுள் முக்கியமான ஒருவராக இவர் கால்பந்தாட்டக் களங்களில் ஆடியதை நாம் கண்டுள்ளோம். விசேடமாக அப்போதைய இடர் மிகுந்த காலத்தில் கால்பந்தாட்டத்தில் ஆர்வஞ் செலுத்திய மிகச் சில இளையவர்களுடன் சேர்ந்து அவ்விளையவர்கள் தரமான வீரர்களாக வளருவதற்கு களமமைத்த சீனியராக இவர் விளங்கினார்.

தற்காலத்தில் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் திறமை மிக்க பல வீரர்கள் உள்ள போதிலும் அவர்களைத் தேசிய மட்டத்திற்கு அடையாளப்படுத்துவதற்குத் தடையாக இருப்பது பெரும்பாலான கழகங்களில் முறையான பயிற்றுனர்களும் பயிற்சிகளும் இல்லாமையே எனத் தனது கணிப்பைக் கூறும் இவர், தற்காலத்திலுள்ள வீரர்கள் பயிற்றுனர்களை மதிக்கும் மனப்பாங்கு அற்றவர்களாக வாழ்வது பெரும் குறையாக உள்ளதாகவும் ஆதங்கப்படுகின்றார்.

குரு இல்லாத வித்தை பாழ் என்பார்கள் அது போல முறையான பயிற்றுனரும் பயிற்சிகளும் இல்லாது விட்டால் கால் பந்தாட்டத்தில் முன்னேறுவதில் பல தடைகளையே எதிர் கொள்ள வேண்டும் எனக் கூறும் மூத்த கால்பந்தாட்ட வீரரின் அறிவுரையினை நமக்கான பாடமாகக் கொண்டு கால்பந்தாட்டம் எனும் வித்தையினை வெற்றி பெறச் செய்வோம்.

## லைற்ஹவுஸ் கிண்ணத்தை நான்காவது தடவையாக வெற்றி கொண்ட யங்ஸ்டார்



மட்டு நகரின் கால்பந்தாட்டப் பண்பாட்டில் அணிக்கு ஏழு வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் மிகவும் சுவாரசியம் மிக்கவையாகவும் அதிகளவு பார்வையாளர்களைக் கொண்டதாகவும், புற நகர்க் கிராமங்களின் கால்பந்தாட்டத் திருவிழாவாகவும் நடைபெற்று வருகின்றன. இப்போட்டிகளூடாகவே சிறந்த கால்பந்தாட்ட வீரர்கள் வளருவதற்கான வாய்ப்புக்களும் ஏதுவாகின்றன.

இந்த வகையில் முகத்துவாரம் லைற்ஹவுஸ் விளையாட்டுக் கழகத்தினர் வருடாந்தம் அணிக்கு ஏழு வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான சுற்றுப் போட்டியினைச் சிறப்பாக ஒழுங்கமைத்து நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விதம் இவ்வருடத்திற்காக லைற்ஹவுஸ் கழகத்தினால் கடந்த 29,30 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற கழகங்களின் 32 அணிகள் பங்குபற்றியிருந்தன.

இதில் இறுதிப் போட்டிக்கு யங்ஸ்டார் கழக அணியும், கோல்ட்பிஸ் கழக அணியும் தகுதி பெற்றிருந்தன. இறுதிப்போட்டியில் யங்ஸ்டார் கழகம் 4:0 எனும் பேறுகளால் வெற்றி பெற்று நான்காவது முறையாகவும் லைற்ஹவுஸ் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

லைற்ஹவுஸ் விளையாட்டுக் கழகத் தலைவர் திரு.வேந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.வியாழேந்திரன் அவர்களும், சிறப்பு அதிதியாக மாவட்ட விளையாட்டு அதிகாரி வே.ஈஸ்பரன் அவர்களும் பங்குபற்றி வெற்றி பெற்ற கழகங்களுக்கு பரிசுகளை வழங்கி வைத்தார்கள்.

இச்சுற்றுப் போட்டியில் மூன்றாமிடத்தை யங்ஸ்டார் கழகத்தின் வி அணியும் நான்காமிடத்தை கதிரொளி கழக அணியும் பெற்றுக் கொண்டதுடன், சுற்றுப் போட்டியின் சிறந்த வீரராக கோல்ட் பிஸ் கழகத்தின் சாணு என்பவரும் சிறந்த கோல் காப்பாளராக யங்ஸ்டார் கழகத்தின் ஜெயந்தக்குமார் எனும் வீரரும் பெற்றுக் கொண்டார்கள்.

## இலங்கை பிரதமர் மற்றும் ஜனாதிபதிக்கு கிரிக்கெட் ஊழல் குறித்து விளக்கினோம்



இலங்கை கிரிக்கெட்டில் நடந்ததாக குற்றஞ்சாட்டப்படும் ஊழல் குறித்து இலங்கை ஜனாதிபதி, இலங்கை பிரதமர், விளையாட்டு அமைச்சர் ஆகியோருக்கு விரிவான தகவல்களை கொடுத்திருந்ததாக சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் எதிர்ப்பு பிரிவின் முகாமையாளர் அலெக்ஸ் மார்சல் கூறியுள்ளார்.

அவர் தற்போது இலங்கை வந்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டில் நடந்ததாக குற்றஞ்சாட்டப்படும் மோசமான ஊழல்கள் குறித்த புலனாய்வின் ஒரு பகுதியாக தாம் இலங்கை வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

புலன்விசாரணை தொடரும் நிலையில், இவை குறித்த மேலதிக தகவல்களை கூறுவது உசிதமானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இருந்தபோதிலும் இது குறித்த பூரணமான தகவல்களை தாம் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விளையாட்டு அமைச்சருக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கான தேர்தல் நடக்கவிருக்கும் சூழ்நிலையில், தற்போதைய நிர்வாகம் தமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விசாரணை முடிய நீண்ட காலம் பிடிக்கலாம் என்றும் ஆனாலும் இவை தற்போது இலங்கையில் நடக்கவிருக்கும் தொடர்களுக்கு சம்பந்தமானவை அல்ல என்றும் அவர் கூறினார்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa




## கலைக்கோகிலத்தின் ''நர்த்தன நிவேதனம்''



மட்டுநகரின் பரதத் தம்பதியான முரளிதரன் சதீஸ்குமார் மற்றும் திருமதி. பிரசன்யா சதீஸ்குமார் இணைந்து வழங்கிய "நர்த்தன நிவேதனம்" என்னும் நாட்டிய நிகழ்வு உண்மையில் சிறப்பாக அமைந்திருந்தது. அரங்கமும் நிறைந்திருந்தது.

நடராஜர் பூசை முதல் தில்லானா மற்றும் மங்களம் வரை நடனத்தின் பலவிதமான உருப்படிகளையும் உள்ளடக்கிய ஒருமுழுமையான நாட்டிய நிகழ்வாக இது அமைந்திருந்தது.

அதேவேளை ஒரு கலைஞன் தனது குருவை எவ்வாறு கனம் பண்ண வேண்டும் என்ற அம்சத்துக்கு ஒரு இலக்கணமாகவும் இந்த நிகழ்வு நடந்தேறியது. "கைச்சிலம்பு" என்னும் ஆட்ட வடிவம் எமது மட்டக்களப்பின் மண்வாசனையை நிறைத்தது. சிறப்பாகக் கூறக்கூடிய மற்றுமொரு நிகழ்வு சதீஸ்குமார் தம்பதியின் "சிவதாண்டவம்". இவர்களது குருநாதர், பரதசூடாமணி, ஸ்ரீமதி சுபத்ரா கிருபாகரனது நட்டுவாங்கத்தில், துல்லியமான ஜதிகூறலுடன், அணிசேர் கலைஞர்களின் கூட்டு முயற்சியாக அது சபையோரை மெய்மறக்கச் செய்தது.

கலைக்கோகிலத்தின் இந்த நர்த்தன நிவேதனம் நிகழ்வில், மட்டக்களப்பின் மறைந்த கலைஞர்களான அமரர் கலாபூஷணம் ஜீவம் ஜோசப் மற்றும் அமரர் லய இசைச் செல்வன் வேல்முருகு சிறிதரன் ஆகியோர் குறித்த நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

அதிதி ஒருவர் 'மட்டக்களப்பில் நடனத்தின் வளர்ச்சி குறைந்து போவதாக' அங்கு உரையாற்றுகையில் கவலை வெளியிட்டார். ஆனால், கடந்த 3/5/2018இல் மட்டக்களப்பு கல்வி வலயத்தினரால் வெபர் மைதானத்தில் நடத்தப்பட்ட "நாட்டியாஞ்சலி 2018" நிகழ்வு மற்றும் கலைக்கோகிலத்தின் இந்த "நர்த்தன நிவேதனம்" நிகழ்வு ஆகியவை வளர்ச்சிப்போக்கையே காண்பிக்கின்றன என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**கலாவித்தகர் மலர்விழி சிவஞானசோதிகுரு**

## நாமும் செய்யலாமா ?



பயிர்களில் தாக்கும் சில புதிய வகையான பூச்சிகளை நாம் இப்போது காணக்கூடியதாக இருக்கிறது. இந்த வகை பூச்சி, புழுக்கள் அநேகமாக தக்காளி, உருளைக்கிழங்கு, வெங்காயம், சிறு தானியங்களில் 100 முதல் 200 முட்டைகள் கொண்ட குவியல்களை இலையின் அடிப்பகுதியில் இடுகின்றன.

இதிலிருந்து வெளிவரும் புழுக்கள் இலைகளைச் சுரண்டி உண்பதால் இலைகள் பச்சையத்தை இழந்து வெள்ளையாகக் காணப்படும். அத்தோடு இவை சிலந்தி போன்று நூல் வலைகளைப் பின்னுவதால் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கு இலகுவாக தாவிச்செல்லும். இதனால் வெகுவேகமாகப் பரவி, பயிர்களை அழிக்க வல்லன. எனவே இவற்றை அழிக்க, எப்படி இயற்கை முறையில் பூச்சிக் கொல்லி தயாரிப்பது என்று பார்ப்போம்.

முறை I - 3 சதவீதம் வேப்பெண்ணெய், 5 சதவீதம் வேப்பங்கொட்டையை அரைத்து இரண்டையும் கலந்து பயிர்களுக்கு தெளித்தல் அல்லது ஆடாதோடை , எருக்கு, சோத்துக்கத்தாளை, துளசி, ஆடுதின்னாபாலை இவற்றையெல்லாம், சிறு துண்டுகளாக வெட்டி அரைத்து மாட்டு ஹோமியம் சேர்த்து ஒரு பானையில் இட்டு பத்து நாட்களுக்கு பின் 1/10 என்ற முறையில் தண்ணி கலந்து பயிர்களுக்கு தெளிக்கவும். இது உங்கள் பயிர்களையும் காக்கும் சுற்று சூழலையும் சுத்தமாக வைத்திருக்கும்.

தயவு செய்து எங்கள் போட்டியில் பங்குபோற்றுபவர்கள் இந்த இயற்கை பூச்சி கொல்லியை செய்து பயன்படுத்துங்கள்.

**சியாமளா ஆனந்தா**

# மட்டு மாநகரசபை

## ‘திருப்பெருந்துறை குப்பை விடயத்தில் மாத்திரம் விட்டுக்கொடுக்க மாட்டேன்’



மட்டக்களப்பின் முன்னைய தலைநகரங்களில் ஒன்றாக கருதப்படுவது திருப்பெருந்துறை (பெரியதுறை). காலனித்துவ ஆட்சிக்காலத்தில், விண்ணாங்காடு, வேப்படித்துறை, கொத்துக்குளம், கதலிவனம், பெரியதுறை போன்ற பல இடங்கள் மக்கள் செறிந்து செழிப்பாக வாழ்ந்த இடங்கள். ஒரு கொள்ளை நோய் காரணமாக மக்கள் அங்கிருந்து வெளியேறி பல ஊர்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

இப்படியாக செழிப்பான புராதன மட்டக்களப்பின் ஒரு நகராக (கப்பல்கள் வந்தடையும் இடமும் கூடவாம்) இருந்த பெரியதுறை இன்று செழிப்பிழந்து மாநகர சபையின் குப்பைகளை க் கொட்டும் இடமாக மாறியுள்ளது. அந்தக் குப்பை இன்று மேடாக மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் ஒன்றாக மாறியுள்ளது. இதில் மலக்கழிவும் அடங்கும்.

அந்தக் குப்பை மேட்டை எதிர்த்தும், அங்கு தொடர்ந்து கழிவுகளை கொட்டக்கூடாது என்று கோரியும் போராடும் அந்தப் பகுதி மக்களின் மாநகரசபைக்கான பிரதிநிதி, கிளி என்று செல்லமாக அழைக்கப்படும், எம். சண்முகலிங்கம்.

பெரியதுறை புதிதாக மாநகரசபையுடன் இணைக்கப்பட்ட ஒரு பகுதியும் கூட.

அந்தக் கிராம மக்களால் பிரேரிக்கப்பட்ட இவர் ஒரு அரசியல் கட்சியில் வேட்பாளராக நிறுத்தப்படுவதாக இறுதிவரை வாக்குறுதி வழங்கப்பட்டு, தான் இறுதியில், பட்டியலில் இருந்து ஒதுக்கப்பட்டதாக கூறுகிறார்.

ஆனாலும், மக்களின் ஆதரவுடன், சுயேச்சையாக போட்டியிட்டு இவர் வெற்றிகரமாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இப்போது மாநகரசபையின், அதன் மேயரின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு தான் முழுதாக ஆதரவு வழங்கிவருவதாக கூறும் சண்முகலிங்கம், ஆனால், பெரியதுறை குப்பை கொட்டும் விவகாரத்தில் மாத்திரம் தான் மாநகரசபையின் நிலைப்பாட்டை கடுமையாக எதிர்ப்பேன் என்கிறார்.

மாநகரசபை வட்டகையில், பெரியதுறை வேகமாக மக்கள் குடியேறும் ஒரு பகுதி. அங்கு வேறு பல தேவைகள் இருக்கின்றன. தெருவிளக்குகள் ஓரளவுக்கு பொருத்தப்பட்டுள்ள. தெருக்களை அமைப்பது போன்ற பல தேவைகள் இன்னமும் இருக்கின்றன. ஆனால், குப்பையை அங்கு வந்து கொட்டுவதை தடுத்து நிறுத்துவதே தமது தற்போதைய மிகப்பெரிய இலக்கு, சவால் என்கிறார் அவர். இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தில் இருக்கிறது. நீதிமன்ற தீர்ப்புவரை இவர்கள் காத்திருக்கிறார்கள்.

அரசியல் கட்சிகளின் அழுத்தங்களுக்கு மத்தியிலும், மக்களால் நேரடியாகவே பிரேரிக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், உள்ளூராட்சியின் அடிப்படை அம்சங்களில் ஒன்றனான நேரடி மக்கள் தெரிவுக்கு ஒரு உதாரணம். ஏனைய அம்சங்களிலும் புராதன நகரான திருப்பெருந்துறையின் ஊடாக இவரது பங்களிப்பு மாநகருக்கு உதவட்டும்.

## தேசிய வாசிப்பு மாதத்துக்கான ஏற்பாடுகள்




இலங்கையில் அனுட்டிக்கப்படும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகரசபை பல ஏற்பாடுகளை செய்து வருகின்றது.


இதற்கான செயலணித்திட்டம் ஒன்றையும் அது வரையறுத்துள்ளது.

இதற்கான பல நடவடிக்கைகளை இந்த மாதத்தில் மாநகரசபை எடுத்து வருவதாக மாநகர துணை ஆணையாளர் தனஞ்சயன் “அரங்கம் செய்திகள்” பத்திரிகைக்கு தெரிவித்தார். இதற்கான விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் நூலகங்கள் எங்கிலும் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

மாநகரசபையின் 4 நூலகங்கள் மற்றும் 5 வாசிப்பு அறைகளின் புத்தகங்களை சேகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அனைவருக்குமான கட்டுரை, சித்திரம், கவிதை போட்டிகளை மாநகர சபை நடத்தவுள்ளது. இதற்கு விண்ணப்பிப்பவர்கள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர நூலகங்களை தொடர்புகொள்ளலாம். இதனைவிட பள்ளிக்கூட மட்டத்தில், வினா - விடைப்போட்டிகளும் நடைபெறும். இம்மாதம் புத்தகக் கண்காட்சி ஒன்று ஏற்பாடாகியுள்ளது. இதில் இலங்கையின் சில பிரபல நூல்வெளியீட்டு நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளன. அதனைவிட புகைப்படப் போட்டி ஒன்றும் நடத்தப்படவுள்ளது. விரும்புபவர்கள் நூலகங்கள் அல்லது மாநகர சபையைத் தொடர்புகொள்ளவும்.

இவற்றைவிட சஞ்சிகை வெளியீடு, நூலக சிரமதானப் பணிகள், புத்தகக் கொள்வனவு, நூலக அங்கத்தவரின் எண்ணிக்கையை அதிகரித்தல், புதிய அங்கத்தவர்களுக்கு 50 வீத கழிவு வழங்கல், கருத்தரங்கு ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று துணை ஆணையாளர் தெரிவித்தார்.

## ஆசிய மன்றத்தின் அனுசரணையில் புகைப்படக் கண்காட்சி



தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாநகர சபையால் புகைப்படக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பல்வேறு வகையான தொனிப்பொருட்களில் நடைபெறவுள்ள இந்த புகைப்படக் கண்காட்சியில் கலந்துகொள்ள விரும்பும் புகைப்படக் கலைஞர்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக மட்டக்களப்பு மாநகரசபை அல்லது நூலகங்களை தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

மாநகரசபையின் வருமான அறவீட்டு மாதத்துக்கு அனுசரணை வழங்கிய ஆசிய மன்றம் இந்த நிகழ்வுக்கும் அனுசரணை வழங்குகிறது

## புத்தகக் கண்காட்சியில் மட்டக்களப்பு எழுத்தாளர்களுக்கும் வாய்ப்பு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபை “புத்தகக் கண்காட்சி” ஒன்றை இம்மாத இறுதியளவில் நடத்த ஏற்பாடு செய்கிறது.

இந்தப் புத்தகக் கண்காட்சியில் இலங்கையின் சில பிரபலமான புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் கலந்துகொள்ளவுள்ளன.


அதேவேளை, மட்டக்களப்பு எழுத்தாளர்களின் புத்தகங்கள் மற்றும் மட்டக்களப்பு பற்றிய புத்தகங்களுக்கும் இந்த புத்தக கண்காட்சியில் இடமளிக்க மாநகர சபை திட்டமிட்டுள்ளதாக மாநகர துணை ஆணையாளர் தனஞ்சயன் கூறியுள்ளார்.

அதன்படி, மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள இந்த புத்தகக் கண்காட்சியில் ஒரு பகுதி மட்டக்களப்பு புத்தகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள எழுத்தாளர்கள் அந்தப் பகுதியில் தமது புத்தகங்களை காட்சிப்படுத்த முடியும். அவற்றை அங்கு வைத்து விற்பனை செய்ய நினைப்பவர்கள் அவற்றை அங்கேயே விற்பனை செய்துகொள்ளவும் முடியும். அதற்கு மாநகர சபையால் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. விரும்புபவர்கள் உடனடியாக மாநகர சபையை தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

## எதிர்பார்க்கப்படும் மாநகர அபிவிருத்திகள் - ஒரு வாசகர் கருத்து

1. கல்லடி சாந்தி திரையரங்கு முதல் மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்ப கல்லூரி அண்மைவரை குறிப்பாக நாவற்குடா படுகாட்டார் வீதி சந்தி வரை மட்டு கல்முனை நெடுஞ்சாலையின் மத்தியில் நிறுவப்படாதுள்ள வீதிவிளக்கு கம்பங்களை நிறுவுதல்.( அவை மாநகரசபையின் கடமையோ அல்லது வீதிஅபிவிருத்தி அதிகாரசபையின் கடமையோ தெரியாது)

2.மாநகரின் முக்கிய இடங்களில் வீதிச்சமிக்ஞை விளக்குகளை பொருத்துதல். புனித மிக்கோல் கல்லூரிச்சந்தி, நீதிமன்ற சந்தி, பிரதேச செயலக சந்தி, மணிக்கூட்டு கோபுரச்சுற்றுவட்டம், பிரதான பேரூந்து நிலையச்சுற்றுவட்டம், காவல் நிலையச்சுற்றுவட்டம், அரசடி மணிக்கூட்டு கோபுரச்சுற்று வட்டம், GV வைத்தியசாலைச் சுற்றுவட்டம், திருமலை வீதியில் புகையிரத நிலைய வீதிச்சந்தி,



Gayathri medicals அருகாமையில் ஊறணிச்சந்தி, திருப்பெருந்துறைச்சந்தி, கல்லடியில் சரவண வீதிச்சந்தி, கல்லடி மணிக்கூட்டு கோபுரச்சுற்றுவட்டம், சிவாநந்த வித்தியாலயச்சந்தி மற்றும் அதற்கு முன்னாலான சந்தி (சஞ்சீவி மருத்துவமனை அருகில்) ஆகிய இடங்களில்.

3. மறைந்த முன்னாள் அமைச்சர் திரு. தேவநாயகம் அவர்களின் திட்டத்திற்கமைய தற்பொழுது மட்டுநகர் நுழைவாயில் உள்ள இடத்திற்கு அருகிலிருந்து மறுகரைக்கு தொங்குபாலம் அமைக்கலாம்(பேராதனை பூங்காவில் உள்ளது போன்று), இப்பாலத்திற்கும் வெள்ளைப்பாலத்திற்கும் இடையில் நீரூற்று ஒன்றினை அமைக்கலாம், மேலும் அதனருகில் சிறுபடகுச்சவாரி ஆரம்பிக்கலாம்.

4. நாவலடியில் சுற்றுலா வலயம் அல்லது Theme park ஒன்றினை அமைக்கலாம்.

5. மாந்தீவு வைத்தியசாலை மூடப்படுமிடத்து அதன் இயற்கைத்தன்மைக்கு ஏற்ப இலங்கையின் இரண்டாவது மிருக காட்சிச்சாலையினை அமைக்கலாம். (மாந்தீவானது சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு வழங்கப்படுமாயின்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# கலித்தொகை இன்பம்

கரத்தைவிடுத்தான், மனத்தைஎடுத்தான்!



இளமைப்பருவத்தில் ஏற்படுகின்ற எண்ணக் கிளர்ச்சியிலே கண்கள் கலப்பதும் காதல் சுரப்பதும் இருபாலாருக்கும் இயற்கையானதே. அவ்வாறு கருத்தொருமித்த காதலர்கள் ஒருவரையொருவர் எண்ணி யெண்ணி ஏங்கித் தவித்தலும், இருவரும் தனிமையில் சந்திக்கத் துடித்தலும், சந்தித்தபோது ஆசையோடு அணைத்தலும், உடல்கள் கலத்தலும், உறவில் களித்தலும், பின்னர் அந்த இன்பத்தை நினைத்தலும்தான் குறிஞ்சித்திணைக்குரிய அகப்பொருள்களாகும். புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சித்திணையின் உரிப்பொருள் என்று தொல்காப்பியம் சொல்கிறது.

அத்தகைய குறிஞ்சி நிலத்திலே வாழ்கின்ற கட்டான உடல்கொண்ட இளைஞன் அவன். காண்போரைக் கவர்ந்திழுக்கும் பேரழகன். அதே ஊரில் வாளிப்பான உடலும், கவர்ச்சியான முகமும் கொண்ட ஒரு பெண்ணிலே அவனுக்குக் காதல் பிறக்கிறது. அவள் வேறு யாருமல்ல. சின்ன வயதில் அவனோடு சிறுவீடுகட்டி விளையாடியவள்தான்.

ஆனால் இப்போது பருவ மங்கை. அவள் மீது கொண்ட ஆசைமிகுதியால் அவளின் வீடுதேடி அவன் செல்கிறான். அவளை வெளியே காணவில்லை. "வீட்டில் யாரும் இல்லையோ" என்று குரல் கொடுக்கிறான். "யாராவது இருந்தால், தாகமாக இருக்கிறது குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்கிறான்

வீட்டினுள்ளேயிருந்த அவளின் தாய்க்கு அவனது குரல் கேட்டுவிடுகிறது. உடனே அவள் மகளைக் கூப்பிட்டு யாரோ தண்ணீர் கேட்கிறார்கள். நீ சென்று அந்தப் பொற்கலசத்திலே தண்ணீர் மொண்டு அவனுக்குக் கொடுத்துவிட்டுவா என்று சொல்கிறாள். அவளும் அவ்வாறே பொன்னால் செய்த

## சட்டத்தரணி, பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

கலசத்திலே தண்ணீர் எடுத்துக்கொண்டு, வீட்டுக்குள்ளிருந்து வாசலுக்கு வருகிறாள். கலசத்திலேயிருக்கும் தண்ணீர் சிந்திவிடாதபடி ஆடாமல், அசையாமல் அன்னம்போல அவள் நடந்து வருகிறாள். அவளின் அழகிலே அவன் ஒருகணம் சொக்கிப் போகின்றான். வாசலுக்கு வந்த அவள்மீது வைத்தகண்களை இமைக்காமல் அபபடியே பார்த்துக் கொண்டிருக்கிறான். அவளின் அழகையெல்லாம் அப்படியே மனதினால் விழுங்குகின்றான். அவன் சின்ன வயதில் தன்னோடு பழகியவன்தான் என்று அவள் அடையாளம் கண்டுகொள்கிறாள். அதனால், அவனைப்பார்த்துப் புன்முறுவல் செய்கிறாள். பின்னர் அவனருகேசென்று தண்ணீர்க்கலசத்தை அவனிடம் நீட்டுகிறாள். அவனோ சட்டென்று அவளின் கையைப் பிடித்துத் தன்னருகே இழுக்கிறான். உடனே, அவள் "ஐயோ! அம்மா இங்கே ஓடிவா. இவன்செய்யும் வேலையைப்பார்" என்று கத்திவிடுகிறாள். அவனது பிடியிலிருந்து தன் கையை இழுக்கிறாள். அவனும் வருடிக்கொடுத்தபடி தன்பிடியைத் தளர்த்துகிறான். கண்கள் நான்கிலும் காந்தசக்தி மின்னுகின்றது. உள்ளேயிருந்த தாய் என்னவோ, ஏதோ என்று அலறியடித்துக்கொண்டு ஓடிவருகிறாள். அவனைக் காட்டிக்கொடுத்தால் அவன் சிக்கலில் மாட்டிக்கொள்வான் என்று அந்தக் காதல் உள்ளம் தயங்குகிறது. உடனே, "ஒன்றுமில்லையம்மா! தண்ணீர் குடிக்கும்போது விக்கல் எடுத்தான் அதுதான்…" என்று மழுப்புகிறாள். அவளின் தாயோ அவன் விக்கல்தான் எடுத்தான் என்று நம்பி அவனின் முதுகைத் தடவிவிடகிறாள். அப்போது அவன் கடைக்கண்ணால் கேலியாகப் பார்க்கிறான். அவனிடமிருந்து தன் கரத்தை விடுவித்தவள், மனத்தை அவனிடம் இழந்துவிடுகிறாள். இந்தக்காட்சியை எடுத்துச் சொல்லும் பாடல் ஒன்று கலித்தொகையிலே உள்ளது.

"சுடர்த் தொடீஇ கேளாய் தெருவில் நாம் ஆடும்

மணற் சிற்றில் காலிற் சிதையா, அடைச்சிய

தொடர்ச்சி… (பக்கம் -03 )

# ஓவியர் புகழேந்தியுடனான கலந்துரையாடலின் மனப்பதிவு

கா' இலக்கிய வட்டம் அரங்கம் பத்திரிகையின் அனுசரணையில் "தூரிகையேந்தியுடனான ஒரு உரையாடல்" எனும் கலந்துரையாடலை 22.09.2018 அன்று காலை 9.00 மணிக்கு அரங்கம் கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்திருந்தது. இதன் அறிமுக உரையை 'கா' இலக்கிய வட்ட உறுப்பினர் சொ.பிரசாத் அவர்களும், தொடக்கவுரையினை கலாநிதி.சு.சிவரெத்தினம் அவர்களும் ஆற்றினார்கள்.




ஓவியம் எனும் காட்சி மொழிதான் மனிதனின் முதல் மொழியாகும். மனித வளர்ச்சியில் காட்சி மொழி வளர்த்தெடுக்கப்படாமல் வாய்மொழியே வளர்த்தெடுக்கப்பட்டது. ஓவியர் புகழேந்தி தனது ஓவியங்களை மக்களுக்கானது என்கின்றார். அதாவது மக்கள் அவ் ஓவியங்களைப் பார்த்து விளங்கவில்லையே எனச் சொல்லக்கூடாது. மக்களுக்கு அது விளங்க வேண்டும். அவர்களுடைய மொழியில் அவை சொல்லப்பட வேண்டும் என்பதில் கவனமாக இருக்கின்றார். அவருடைய பெரும்பாலான படைப்புகள் மனித குலத்தின் அவலத்தை வெளிப்படுத்துபவையாகும். ஈழப் போர்,

## கலாநிதி சு.சிவரெத்தினம்

குஜராத் நில நடுக்கம், சாதி மோதல்கள் என மனித குலத்தின் துயரத்தை பங்கிடுபவராக இருந்து வருகின்றார். மக்கள் கூடும் இடங்களில்த்தான் தனது ஓவியக் கண்காட்சிகளை நடாத்தவதாகக் கூறும் புகழேந்தி, ஈழப் போரில் தமிழ்மக்கள் பட்ட வேதனைகளும் துயரங்களும்தான் தன்னை இவ்வாறு ஒரு ஓவியனாக்கியது என்கின்றார். 'எனது ஓவியங்கள் ஈழப் போர் பற்றி இருந்தாலும் அவை ஒரு விதத்தில் எங்கெல்லாம் யுத்தமும் அழிவும் இருக்கின்றதோ அவர்களுக்கெல்லாம் பொதுவானதாகத்தான் இருக்கின்றன' என்கின்றார். 83 யூலை இனப்படுகொலையினைத் தொடர்ந்து அதன் தாக்கத்தின் காரணமாக 'எரியும் வர்ணங்கள்' என்ற ஓவியத் தொகுப்பை வெளியிட்ட புகழேந்தி அவர்கள் அதனுடன் நின்றுவிடாது இன்றுவரை ஈழத்தில் நடந்த யுத்த அவலங்களையும் யுத்தத்தின் பின்னரான மக்களின் நிலையினையும் தொடர்ச்சியாக வரைந்ததோடு ஈழப்போராட்டம் தொடர்பாக 100 க்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்து, அவற்றை இந்திய அளவிலும் சர்வதேச அளவிலும் காட்சிப்படுத்தியும் உள்ளமை அவர் ஈழத்தமிழர்கள் மேல் கொண்ட உணர்வின் வெளிப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன.

ஈழத்தைப் பொறுத்தவரை யுத்த வெளிப்பாட்டு ஓவியங்களை முதன் முதல் வரைந்தவராக ஓவியர் மாற்கு அவர்களே காணப்படுகின்றார். அவருடைய 'அவதி,' 'யூலை 83;' என்பவை குறிப்பிட்டுச் சொல்லக்கூடியனவாகும். இவரைத் தொடர்ந்து அனேகமாக எல்லா தமிழ் ஓவியர்களும் யுத்த வெளிப்பாட்டு ஓவியங்களை வரைந்தவர்களாக இருந்த போதிலும். புகழேந்திபோல் இவ்வளவு தொகையான ஓவியங்களை எவரும் வரையவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். இந்தவகையில் ஈழத்தின் யுத்த அவலத்தினை காட்சி மொழியினூடாக ஆவணப்படுத்தியிருப்பதும் அவருடைய



முக்கிய பணியாக இருக்கின்றது.

கலைஞன் தான் வாழாத, தான் அனுபவிக்காத ஒரு விடயம் தொடர்பாக படைப்புக்களை மேற்கொள்ளலாமா என்பது இங்கு பொதுவாக மேலெழுந்த ஒரு கேள்வியாகும். தனது உடல்தான் தமிழகத்தில் இருந்ததே தவிர தனது ஆத்மா ஈழத்திலே இருந்தது என ஓவியர் புகழேந்தி பதிலளித்தார். அத்துடன் இறுதி யுத்தத்தின் அனுபவங்களை பல போராளிகளிடமும் பொதுமக்களிடமும் அறிந்து உணர்ந்து அவற்றை உயிரோட்டமாக வரைந்ததாகவும் குறிப்பிட்டார்.

கலைஞன் ஒரு பக்கத்தை மாத்திரமன்றி சம்பவத்தின் எல்லாப் பக்கங்களையும் வெளிப்படுத்துபவனாக இருக்க வேண்டும். அந்தவகையில் ஈழத்தில் நடந்த சகோதரப் படுகொலைகள் பற்றி உங்கள் பதிவு என்ன என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டபோது ஓவியர் புகழேந்தி தான் எதைச் செய்ய வேண்டும் என்பதில் தெளிவாக இருப்பதாகக் குறிப்பிட்டார். அவருடைய அந்தப் பதில் அவரை ஒரு கலைஞராக அன்றி ஒரு போராளியாகவே இனங்காட்டியது.

சகோதரப் படுகொலைகள் மட்டுமன்றி கட்டாய நிதி வசூலிப்பு, கட்டாய ஆட்சேர்ப்பு, என்று ஒரு துன்பியல் அரங்கேறியதை தமிழ் மக்கள் அவ்வளவு இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள், அந்த வலியும் சுமையும் இலகுவானதல்ல. இலக்கியத்தில் இவ்வாறான உணர்வுகள் பதிவு செய்யப்பட்டளவு ஓவியத்தில் பதிவு செய்யப்படாததும் எமது ஓவியக் கலைஞர்களின் ஒரு பக்கச் சார்புத் தன்மையை வெளிக்காட்டுவதாக இருக்கின்றது. இருந்தபோதும் கட்டாய ஆட்சேர்ப்பு தொடர்பான வலியை கமலா வாசுகி அவர்கள் 'எனது பிள்ளை யுத்தத்துக்கு அல்ல' எனும் ஓவியத்தின் மூலம் வெளிக்காட்டுகின்றார். இவ்வாறு யுத்தத்தின் எல்லா நிலைகளையும் தமது படைப்பினூடாக வெளிக்கொண்டு வரும்போது அது ஈழத்து யுத்தம் தொடர்பான மொத்த உணர்வுகளின் வெளிப்பாடாக இருக்கமுடியும்.

கலந்துரையாடலில் பங்குகொண்ட ஒருவர் 'உங்களுடைய ஓவியங்கள் சமகாலத்தவையாக இல்லை, அவை பெருமளவுக்கு இயல்பானவையாக இருக்கின்றன. ஏன் நீங்கள் சமகால ஓவியங்களைப் படைப்பதில்லை' என ஒரு கேள்வியைக் கேட்டார். அதற்கு ஓவியர் 'சமகாலம் என்றால் என்ன? நான் சமகால ஓவியங்களைத்தான் படைக்கின்றேன். 1983ம் ஆண்டும் எனக்குச் சமகாலந்தான் இப்போதும் சமகாலம்தான்' என்றார். இந்தக் கேள்வியைக் கேட்டவர் ஓவியம் தொடர்பாக சரியான புரிதலுடன் கேட்டதாக எனக்குத் தெரியவில்லை. ஆயினும் இன்று மட்டக்களப்பில் நவீன ஓவியர்கள் என்று சொல்லப்படுபவர்களின் வேதவாக்கியமாக 'சமகால ஓவியம்' எனும் சொல் நடைமுறையில் உள்ளதனை அறியக் கூடியதாக இருக்கின்றது. கலைவரலாற்றினதும் அந்த வரலாற்றினூடு வளர்ந்து வந்த கலைக் கொள்கை தொடர்பாகவும் போதிய விளக்கமின்றி 'சமகாலம்' எனும்

தொடர்ச்சி… (பக்கம் -15 )

# கற்போம்

## கணிதம் கடினமல்ல

சஹ்ஹானா ஜோசப்

இந்த வாரம், தொடர்கள் பற்றிய கணித்தல்கள் சார்ந்து கலந்துரையாட உள்ளோம். மேலும் குறிப்பாக எண்கணித தொடர்களை உற்றுநோக்க உள்ளோம், அடுத்துவரும் தொடரினை அவதானிக்கவும்,

4,6,8,10,12...

மேலுள்ள தொடரின் வித்தியாசங்களை அவதானிப்பதன் மூலம் ஆரம்பிக்கலாம். இத் தொடரில் ஒவ்வொரு தடவையும் முந்தைய உறுப்புடன் இரண்டு கூட்டப்படுகிறது. தொடரின் 150ஆவது உறுப்பு கேட்கப்படும் போது பல முறை 2 கூட்டவேண்டி இருக்கும். ஆகவே 150ஆவது உறுப்பு பெற சில அடிப்படை கணித்தல்கள் மூலம் பெறப்பட்ட ஓர் எளிய சூத்திரம் உள்ளது. தொடரில் உள்ள ஒவ்வொரு எண்ணிற்கும் இலக்கமிடுவதன் மூலம் ஆரம்பிக்கலாம்.

| n | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| Sequence | 4 | 6 | 8 | 10 | 12 |

நாம் முன்பே வித்தியாசம் +2 என அறிந்துவிட்டோம். தற்போது இது n இன் குணகமாகும். ஆகவே உங்களது குணகம் 2n ஆகும். சூத்திரத்தின் அடுத்த பகுதியை பெற 0ம் உறுப்பை அதாவது $n=0$ கண்டுபிடிக்க வேண்டும். 4க்கு முன்னர் உள்ள எண் என்பதை கண்டறிவதன் மூலம் அதை கண்டுபிடிக்கலாம் இதற்காக நாம் 4 லிருந்து 2ஐ கழித்துவிடுவோம்

| n | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| Sequence | 2 | 4 | 6 | 8 | 10 | 12 |

இந்த உறுப்பு சூத்திரத்தின் அடுத்த பகுதியாகும். ஆகவே உங்களது சமன்பாடு $2n+2$ இதன்போது 150ஆவது உறுப்பு பெற $n=150$, ஆகவே $2(150) + 2 = 302$.
இத் தொடரின் 150ஆவது உறுப்பு 302 ஆகும். இந்தவார சவாலில் சென்று பதிலை அறிய முடிகிறதா எனப்பாருங்கள்.

### இந்தவார கணித புதிர்

பின்வரும் தொடரின் 200வது உறுப்பை கண்டுபிடியுங்கள்.

6,9,12,15,18....

### கடந்தவார விடைகளும் பதில்களும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 6 | 7 | 9 | 3 | 4 | 2 | 5 |
| 4 | 3 | 7 | 5 | 6 | 2 | 8 | 9 | 1 |
| 2 | 5 | 9 | 8 | 1 | 4 | 7 | 3 | 6 |
| 9 | 2 | 4 | 3 | 5 | 6 | 1 | 8 | 7 |
| 3 | 7 | 5 | 2 | 8 | 1 | 6 | 4 | 9 |
| 6 | 1 | 8 | 9 | 4 | 7 | 3 | 5 | 2 |
| 8 | 9 | 3 | 1 | 7 | 5 | 2 | 6 | 4 |
| 7 | 4 | 2 | 6 | 3 | 9 | 5 | 1 | 8 |
| 5 | 6 | 1 | 4 | 2 | 8 | 9 | 7 | 3 |

## ''சாகாகக்கவி'' கவிதை நூல் வெளியீடு



காலஞ்சென்ற கவிஞர் மா . சோமலிங்கம் எழுதிய “சாகாக்கவி” என்னும் கவிதை நூல் வெளியீடு சனிக்கிழமை (06/10/20180) காலை 10 மணிக்கு மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடக்கவிருக்கின்றது.

கவிஞர் பொன். தவநாயகம் தலைமையில் இந்த நிகழ்வு நடக்கவிருக்கின்றது. முதல் பிரதியை தமிழ்ச் சங்கத்தலைவர், சைவப் புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி பெறுகிறார்.

மாகாண முன்னாள் அமைச்சர் கி.துரைராசசிங்கம் நூலுக்கான நயவுரையை செய்யவுள்ளார்.

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

சட்டங்களும் ஒப்பந்தங்களும்

---

01) தேச வழமைச் சட்டம். (ஒல்லாந்தரால்) - 1707
02) நொத்தாரிசுச் சட்டம் - 1902
03) தனிச் சிங்களச் சட்டம் - 05.06.1956.
04) பண்டா– செல்வா ஒப்பந்தம் - 1957
(பிராந்திய சபைகள் அமைப்பதற்கானது)
05) பயங்கரவாதத் தடைச் சட்டம் - 1979
06) குடியுரிமைத்தடைச்சட்டம் (J.R.ஜெயவாத்தனவால்)-29.08.1980
(ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை பறிப்பதற்காக)
07) இலங்கை-இந்திய சமாதானஉடன்படிக்கை - 29.07.1987.
08) மனித உரிமைகள் சட்டம் - 1996
09) இலங்கை ஐக்கியநாடுகள்சபையில் உறுப்புரிமைபெற்றது - 1955
10) இலங்கை ஐ.நா பாதுகாப்புசபையில் உறுப்புரிமைபெற்றது - 1962

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 5

### தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

கம்பராமாயணம் குகப்படலத்தில் உள்ள செய்யுள்களில் எட்டுச் செய்யுள்கள், குறித்த பாடப் பகுதியில் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு செய்யுள் வருமாறு.

சுடுமயானத் திடைத்தன் துணையேகத்
தோன்றல் துயர்க் கடலினேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார்
கலியேகக் கழல்கால் மாயன்
நெடுமையா லன்றளந்த வுலகெல்லாம்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையா லளந்தாளை ஆரிவரென்று
உரையென்னக் குரிசில் கூறும்

இச்செய்யுளை உள்ளபடி வாசித்த பின்னர் பின்வருமாறு வகைப்படுத்தி வாசித்துப் பாருங்கள்.

1. தன்துணை சுடுமயானத்திடை ஏக
2. தோன்றல் துயர்க்கடலின் ஏக
3. கருணை ஆர்கலி கடுமையார் கானகத்து ஏக
4. கழல்கால் மாயன் நெடுமையால் அன்றளந்த உலகெல்லாம்
5. தன்மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாளை
6. ஆர் இவர் என்றுரை என்ன
7. குரிசில் கூறும்.

- ‘சுற்றத்தார்….’ என்று தொடங்கும் செய்யுளில், கோசலையைத் தொழுது நோக்கிய பின்னர்தான் ‘இவர் ஆர்’ என்று கம்பன் குகனைக் கேட்கவைக்கிறான்.

- ‘அறந்தானே….’ என்று தொடங்கும் செய்யுளில், சுமித்திரையை ‘அறந்தானே என்கின்ற அயல் நின்றாள்தனை நோக்கி’ , ‘அன்பின் நிறைந்தாளை உரை’ என்றெல்லாம் குகனைச் செயற்படவும் சொல்லவும்வைக்கிறான் கம்பன்.

(1) தன் கணவன் இறப்பதற்குக் காரணமாக இருந்தவள்.
(2) தன் மகன் துயர்க்கடலில் மூழ்குவதற்குக் காரணமாக இருந்தவள்.
(3) இராமன் காட்டுக்குச் செல்லக் காரணமாக இருந்தவள்.
(4) (அவதாரம் எடுத்துத்தான்) திருமால் உலகை அளந்தார். ஆனால் (அவதாரம் எடுக்காமலே) கைகேயி தன் மனத்தில் தானே நினைத்துச் செய்பவள். அதாவது கொடுமையானவள். இவ்வாறு கம்பனே கைகேயியைப் படம்பிடித்துக் காட்டிய பின்னர்தான் ‘ஆர் இவர்?’ என்று வெறுமனே குகனைக் கேட்கவைக்கிறான்.

- இவ்வாறு கோசலையையும் சுமித்திரையையும் பெருமைப்படுத்திய கம்பன் கைகேயியைப் பெருமைப்படுத்தவில்லை என்பதை மாணவர்கள் கவனிக்க வேண்டும். நுட்பமாகக் கவனிக்கக் கவனிக்க விடையளிப்பது இலகுவாக இருக்கும்.

இவ்வாறு செய்யுளைப் பொருத்தமான முறையில் வகுத்து நோக்கும் போது வினாக்களுக்கு விடையளிப்பது சுலபமாக இருக்கும். சில வினாக்களை உருவாக்குவோம்.

01. சுடுமயானத்திடை சென்றவர் யார்?
02. துயர்க்கடலில் ஏகியவர் யார்?
03. கடுமையார் கானகத்துக்குச் சென்றவர் யார்?
04. ‘கழல்கால் மாயன்’ என்று சுட்டப்பெறுபவர் யார்?
05. நெடுமையால் அன்று உலகை அளந்தவர் யார்?
06. ‘கொடுமையால் அளந்தாள்’ என்று குறிப்பிடப்படுபவர் யார்?
07. ‘ஆர் இவர் என்றுரை’ - இது யாரின் கூற்று?
08. ‘குரசில்’ என்று சுட்டப்பெறுபவர் யார்?
09. மயானம், துணை, தோன்றல், துயர், கானகம், குரிசில்- இவற்றின் பொருளைத் தருக.
10. உருவக அணிகளை எடுத்துக்காட்டிச் சுருக்கமாய் விளக்குக.
11. இச்செய்யுளைப் படிக்கும் போது கம்பன் பற்றிய உமது மனப்பதிவினைக் கூறுக.

இப்பகுதியில் எத்தகைய விடயங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும் வினாக்களையும் மாணவர்கள் அரங்கம் பத்திரிகைக்கு அனுப்பிவைக்கலாம். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். தாமதிக்காதீர்கள். க.பொ.த.(சா.த) பரீட்சை நெருங்குகிறது.

ஆசிரியர்-அரங்கம், இல:227, பார் வீதி மட்டக்களப்பு.

பக்க அனுசரணை



# ‘தமிழ்‘ என்னும் புதிய வாத்தியம்



தமிழர் வாத்தியங்களில் ஒன்று நாதஸ்வரத்துடன் இணைந்து வாசிக்கும் மேளம். அம்மேள வாத்திய இசை பல உச்சங்களைத் தொட்டுள்ளது. இந்த மேள இசை நமது நாடி நரம்பெல்லாம் ஊறிப்போய்க் கிடக்கிறது

இந்த மேளம் தமிழர் மத்தியில் எப்போது அறிமுகமானது?

ஆதிகாலத்தில் தமிழரிடையே இத்தகை மேளங்கள் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லை. பறைகள் பற்றிய செய்தியே எமக்குக் கிடைக்கின்றன
ஆகவே பின்னால் வந்த இந்த மேளம் யாராலோ உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் இது உருவானது?

இதற்கான சமூகத்தேவை என்ன என யாரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. இது போலவே ஒவ்வொரு இசைக்கருவிகளும் ஒருவரால் உருவாக்கப்பட்டு, பின் சிலரால் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு இந்த நிலைக்கு வந்துள்ளன.

இராவணேசன் நாடகத்தில் தபேலாவும் இன்னும் சில நூதன கருவிகளும் வாசிப்பதுடன், உரிய இடங்களில் பின்னணி இசையும் வழங்குபவர் கலாநிதி பிரதீபன். இவர் கிழக்குப் பல்கலைக் கழக விபுலானந்த இசை நடன நிறுவக சங்கீத விரிவுரையாளர் இம்முறை இராவணேசன் பயிற்சியின் போது ஒரு பெரியதோர் தோல் வாத்தியத்தை அவர் கொணர்ந்திருந்தார். மிக அலங்காரமாகவும் வினோதமாகவும் அது காட்சியளித்தது.

ஈழத்துப் பறை ஒருபுறமாகவும் தமிழகப்பறையான தப்பு
இன்னொரு புறமாகவும் இணைக்கப்பட்ட ஓர் மேளவாத்தியம் அது. ஈழத்துப்பறை இருபக்கமும் தோல் கொண்டது, தமிழகப்பறை ஒருபக்கம் தோல் கொண்டது. இரண்டும் இருவேறு ஒலிகளைத் தருவன. இரண்டையும் இணைப்பின் என்ன ஒலி எழும்?

ஈழப்பறை பக்கம் வாசிப்பின் ஈழப்பறை ஒலி எழும் தமிழகத் தப்பு அல்லது பறை பக்கம் வாசிக்கையில் இன்னொரு ஒலி எழும். இரண்டையும் வாசிக்கையில் இரண்டும் கலந்த இன்னொரு ஒலி எழும், அது நூதனமாக இருக்கும்.

மாங்கனிகளில் பலவகையுண்டு, அதில் ஒன்று ஒட்டுமாங்கனி.

அதன் சுவை அலாதியானது, இரண்டு மா இனங்களை ஒட்டி பெறப்படும் கனி அது. அதேபோல இங்கு இரண்டு தோல் வாத்தியங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

இதனை நாம் ஒட்டுப்பறை என அழைக்கலாம்.

இந்த ஒட்டுப்பறை இசையின் ஒலியும் சுவையும் அலாதியானது. தீபன் அதனை வாசித்துக்காட்டினார். அவ்வொலி எனக்கு பிடித்துக்கொண்டது.




இது கலாநிதி பிரதீபனின் கண்டு பிடிப்பு
அவரது பி.எச்.டி பட்ட ஆய்வின் ஒருபகுதி இதுஎன அறிகிறோம். அவர் தன் ஆய்வை தமிழ்நாடு தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சுவாமி விபுலானந்த அடிகளார் பேராசிரியரகப் பணி புரிந்த காலத்தில், பண்டு தமிழர் மத்தியில் இருந்த யாழ்களை தமது ஆராய்ச்சியின் பின் கற்பனைக்கண்கொண்டு உருவாக்கினார்.

அவர் பெயரில் இயங்கும் நிறுவகத்தில் விரிவுரையாளரகப் பணிபுரியும் பிரதீபனும் சுவாமிகளின் வழியில் முயன்று தானும் ஓர் புதுக்கருவியைக் கண்டு பிடித்துள்ளார். அதற்கு அவர் "தமிழ்" எனப்பெயரும் இட்டுள்ளார். இத்தகைய கண்டு பிடிப்புகளை நாம் விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நிறைய எதிர்பார்க்கிறோம். கண்டு பிடிப்புகள் விஞ்ஞானத்தில் மாத்திரமே நிகழ வேண்டும் என்பதில்லை

இந்த வகையிலும் இடம் பெறலாம். தமிழ் எனப் பெயரிய இவ் வாத்தியத்தை இம்முறை இராவணேசனில் பயன்படுத்த எண்ணினேன். இம்முறை சுகவீனம் காரணமாக எமது பிரதான பாடகி சுகிர்தா வரமுடியவில்லை. மோஹனதாசனை




எடுத்துரைஞர் பாத்திரம் ஏற்குமாறு கேட்டேன். ஒத்துக்கொண்டார். இந்த முரசு முழக்கத்துடன் இராவணனை முரசறைவோன் அழைத்து வருவதாக அமைத்தோம். அக்காட்சி நல்ல எடுப்பாக அமைந்ததுடன் இராவண கம்பீரத்தை இன்னும் கூட்டியது.

புது வாத்தியம் இன்னும் ஒன்று இராவணேசனில் இணைந்து கொண்டது.

கலாநிதி பிரதீபனுக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்களும் நன்றியும்

தொடர்ச்சி...

## தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்

அரசாங்கம் ஏற்றதாக இரா. சம்பந்தன் தம்மிடம் கூறியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

அப்படியிருந்தும் இன்று வரை அந்த விடயத்தில் முக்கியமான நடவடிக்கை எதுவும் இல்லாது இருப்பது அந்தக் கட்சியின் அக்கறையற்ற தன்மையைக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

### அநுராதபுரத்தில் போராட்டம்

அதேவேளை, வெள்ளிக்கிழமை அநுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி தமது அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் சத்திவேல் கூறினார்.

# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## இலக்கிய அரங்கிலிருந்து அரசியல் அரங்கிற்கு வருகைதந்த படைப்பாளி எம்.எச்.எம். அஷ்ரப்



அமரர் எம். எச்.எம். அஷ்ரப்

கொழும்பில் 1972 ஆம் ஆண்டு முதல் வெளிவரத் தொடங்கிய "பூரணி" காலாண்டு இதழின் விமர்சன அரங்கு கொழும்பு சட்டக்கல்லூரியில் நடந்தபோது ஒரு மாணவர் உரையாற்றினார்.

அன்றைய திகதி 25-06-1973.

அந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கியவர் அங்கு சட்டம் படித்துக்கொண்டிருந்த சட்டக்கல்லூரியின் தமிழ்மன்றத்தின் தலைவர் குமாரசாமி விநோதன். அவர் தலைமையுரையாற்றத் தொடங்கியதுமே அடிக்கடி குறுக்கிட்டு செய்துகொண்டிருந்தார் ஸ்ரீகாந்தா என்ற மற்றும் ஒரு மாணவர்.

இவர் குதர்க்கம் பேசி தலைவருக்கு சினமூட்டிக்கொண்டிருந்தார்.

எனினும் சினம்கொள்ளாமல் பவ்வியமாக நிகழ்ச்சியை விநோதன் நடத்தினார். இந்த விமர்சன அரங்கிற்கு பூரணி இணை ஆசிரியர் என்.கே.மகாலிங்கம் அவர்களுடன் சென்றிருந்தேன். சட்டக்கல்லூரி மாணவர்கள் பலரும் வந்திருந்தார்கள்.

எழுத்தாளர்கள் இளம்பிறை எம். ஏ. ரஹ்மான், எச்.எம்.பி. மொஹிதீன் ஆகியோருடன் சட்டக்கல்லூரி மாணவர்கள் எம்.எச்.எம் அஷ்ரப், பெரி. சுந்தரலிங்கம், மனோகரன், வரதராஜா, சிவராஜா ஆகியோரும் உரையாற்றினர்.

பின்னாளில் சிறந்த மேடைப்பேச்சாளராக வளர்ந்த செல்வி சகுந்தலா சிவசுப்பிரமணியமும் சபையில் அமர்ந்திருந்தார். அவரும் அங்கு சட்டம் படித்துக்கொண்டிருந்தவர்.

ஏறக்குறைய நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் அந்த விமர்சன அரங்கை நினைத்துப்பார்க்கின்றேன். நினைக்கத் தூண்டியவர்தான் எம்.எச். எம் அஷ்ரப்.

பின்னாளில் குமாரசாமி விநோதன் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார். சகுந்தலா சிவசுப்பிரமணியம் ஒரு விமானப்பயணத்தின்போது எதிர்பாராதவகையில் மரணமடைந்தார்.

பெரி.சுந்தரலிங்கம் எம்.ஜீ.ஆரின் பெயரில் ஒரு பத்திரிகையும் நடத்தி பின்னாளில் மறைந்துவிட்டார்.அஷ்ரப் சட்டத்தரணியாகி கிழக்கி லங்கையில் புகழ்பெற்று, அரசியல் பிரவேசம் செய்து, 1983 இற்குப்பின்னர் முஸ்லிம் காங்கிரஸை தோற்றுவித்து, இலங்கை அரசியலிலும் பிரகாசித்து, எதிர்பாராத விதமாக 16-09-2000 ஆம் திகதி சனிக்கிழமை நிகழ்ந்த ஒரு விமான விபத்தில் கொல்லப்பட்டார். அன்று சட்டக்கல்லூரியில் விநோதனுடன் தர்க்கமாடிய மாணவர் என். ஸ்ரீகாந்தா இன்றும் அரசியல் (சதுரங்கத்தில்) அரங்கில் தர்க்கமாடிக்கொண்டிருக்கும் அரசியல்வாதியாக டெலோ இயக்கத்தின் செயலாளராகத் திகழுகிறார்.

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

அன்று சட்டக்கல்லூரியில் ஈழத்து இலக்கியத்தில் கவிதைகள் எவ்வாறு அமையவேண்டும் எனப்பேசிய அஷ்ரப், பின்னாளில் கவிஞராகவே மலர்ந்தவர். தினமும் ஒரு கவிதை எழுதுவதை வழக்கமாக்கிக்கொண்டிருந்தவர். அரசியல் தலைவராகி தேர்தலில் நின்று வெற்றிகளை குவித்து, அமைச்சரானதன் பின்னரும் தினமும் ஒரு கவிதையாவது எழுதியவர்.

1973 இல் சட்டக்கல்லூரியில் அவர் இலக்கியம் பேசிய தோரணையைப் பார்த்தபோது எதிர்காலத்தில் புகழ்பெற்ற இலக்கியப்படைப்பாளியாகத்தான் வருவார் என்று கருதினேன். ஆனால், காலம் அவரை மாற்றியது. தான் விரும்பிய ஆழ்ந்து நேசித்த கவிதைகளை தினமும் எழுதிக்கொண்டே, நாடாளுமன்றத்தில் அதிர்வலைகளை எழுப்பினார். எம்.

எச். எம். அஷ்ரப் (முகம்மது ஹுசைன் முகம்மது அஷ்ரப்) அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறையில் முகம்மது உசைன் - மதீனா உம்மா தம்பதியரின் ஏக புதல்வன். 1948 இல் பிறந்த அஷ்ரப், கல்முனைக்குடியில் தனது ஆரம்பக்கல்வியை தொடங்கி, இடைநிலைக்கல்வியை கல்முனை பாத்திமா கல்லூரியிலும் உயர்தரத்தை வெஸ்லியிலும் முடித்துக்கொண்டு, கொழும்பு சட்டக்கல்லூரிக்கு படிக்கச்சென்றார். அங்குதான் பூரணி விமர்சன அரங்கில் முதல் முதலில் சந்தித்தேன்.

அவர் கிழக்கிலங்கையில் தனது வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டிருந்த வேளையில் 1982 - 1983 காலப்பகுதியில் பாரதி நூற்றாண்டு வந்தது.

எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கம், பாரதி நூற்றாண்டுக் கொண்டாட்டங்களை முன்னெடுத்தபோது கல்முனை, அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலும் கண்காட்சிகளையும் விழாக்களையும் நடத்தியது. கிழக்கிலங்கை நிகழ்ச்சிகளில் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த பாரதி இயல் ஆய்வாளர் தொ.மு.சி. ரகுநாதனும் இலங்கையின் மூத்த நாவலாசிரியர் இளங்கீரனும் நானும் உரையாற்றினோம். அந்த நிகழ்ச்சிகளுக்கு ஒரு பார்வையாளராகவே அஷ்ரப் வருகைதந்து கலந்துகொண்டார்.
டொக்டர் முருகேசம் பிள்ளை அவர்களின் கல்முனை இல்லத்தில் நடந்த இராப்போசன விருந்துக்கும் வந்தார். இங்குதான் அவரை

தொடர்ச்சி... (பக்கம் -15 )


பன்னூல் படைப்பிலக்கியவாதி வெல்லவூர்க் கோபாலின் நீண்டகாலத் தேடலின் அறுவடை கண்ணகி வழிபாடு - பார்வையும் பதிவும்.

ஆழ்கடல் கடந்த ஆய்வு, ஆழமான ஆய்வு, ஆய்வுச் செறிவு நிறைந்த ஆய்வு, அதனால் கண்ணகி வழிபாட்டில் ஈடுபாடு கொண்டோர்க்கு இது அற்புதமானதொரு படையல். அந்தப் பேழையினை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம் ஐப்பசித் திங்கள் ஏழாம் நாள் 07.10.2018 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.45 மணியளவில் மட்டக்களப்பு தேவநாயகம் கலை அரங்கில் அதன் தலைவர் சைவப் புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி தலைமையில் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது.

அப்பெரும் நூல் அரங்கேற்ற விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி ப. புஸ்பரட்ணம், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி வ. மகேஸ்வரன் ஆகிய பெருந்தகைகள் முன்னிலை வகிக்கவிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.







வெல்லாவெளி, அதுவொரு தமிழ்வெளி, தமிழ் செய்யும் வல்லோன் பலரை உலகிற்கு ஈந்தளித்து உவகை கொள்ளும் பதி; தமிழ் இலக்கிய உலகு நன்கறிந்த கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களையும் நமக்கீந்த பெரும் பதியும் அப்பதியேதான்.

அந்த மண்ணின் மகிமை அகவை பதினான்கிலே அவருக்குள் கவிதை ஊற்றெடுக்கத் தொடங்கிற்று. க.பொ.த. (உ/த) பயிலும் காலத்தே அவருக்குள்ளிருந்து பாய்ந்த தமிழ் வெள்ளம்தான் 'கன்னிமலர்' எனும் கவிதை நூல். இந்நூல் வெளியீட்டு விழாவில் சொல்லின் செல்வர் செ. இராசதுரை அவர்கள் கவிக்கோவைப் பாராட்டித் தட்டிக்கொடுத்தார்.

அவ்வாறு பெருக்கெடுத்த இரண்டாவது கவிமழை 'இதயச்சங்கமம்'. அம்மலருக்குத் தமிழ்ப் பெருந்தகை தமிழ்ப் பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் அணிந்துரை வழங்கித் தமிழுலகிற்கு அவரை அறிவித்தார்.

1990களில் நமது நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருந்த அசாதாரண நிலைமை இப்படைப்பாளியைப் புலம்பெயர வைத்தது.

'இதயச்சங்கமம்' என்ற நூலையும் சுமந்தே கடல் கடந்தார். அங்கே தமிழறிஞர்கள் பலரோடு தொடர்புகளை ஏற்படுத்தினார். அதனால் அவருக்குள் ஊற்றெடுத்த தமிழ் வேகம் கொண்டது.

புலப்பெயர்வு அவர் புலமையைக் கூர்மைப் படுத்திற்று. கவிவானிற்குற் பாடிப் பறந்து திரிந்த குயில் தன் சிறகுகளை அகல விரித்து அதற்கும் அப்பால் வட்டமிடத் தொடங்கிற்று.

தன்னைக் கவிஞனாக அறிமுகப்படுத்திப் பின்னர் இலக்கியம், வரலாறு, சமூகம் சார்ந்த ஆய்வுப் புலமையென்று பல பரிமாணங்களில் தன்னை ஈடுபடுத்தத் தொடங்கினார். தமிழகத்தில் வாழ்ந்த ஆரம்ப காலப்பகுதியில் ஈழத்தில் நிகழ்ந்த விடயங்கள் அவர் ஆள்மனதில் தாக்கத்தையேற்படுத்திய காரணத்தினால் அப்போது அவர் நெஞ்சில் பதிவான காட்சிகள் 'நெஞ்சக்கனல்' என்ற நூலில் பதிவானது. அந்நூல் தமிழகத்தில் வெளியிடப்பட்டது.

அங்கவர் வாழ்ந்த காலப்பகுதியில் அவருக்கேற்பட்ட அறிஞர் பெருமக்கள் உறவு அவர் தேடலுக்குக் கைகொடுத்தது. அதன் பயனாக

(1) தமிழக வன்னியரும், ஈழத்து வன்னியரும்

(2) மட்டக்களப்பு வரலாறு அறிமுகம்

(3) மலையாள நாடும் மட்டக்களப்பும்

(4) மட்டக்களப்புத் தேசம் வழக்காறும், வரலாறும் என்னும் வரலாற்று ஆய்வு நூல்கள் வெளிவந்தன.

இவ்வாறு இருபது நூல்களைப் படைத்துப் புகழ்கொண்ட கவிக்கோ அவர்கள் இயல்பாகவே கண்ணகி வழிபாட்டோடு

# தரணிபோற்றத் தமிழ் வளர்ப்போம்!

## கண்ணகி வழிபாடு : பார்வையும் பதிவும்

*(கவிக்கோ வெல்லவூர்க் கோபாலின் மற்றுமொரு தேடல்)*

ஈடுபாடு கொண்டவர். கண்ணகி வழிபாடு - பார்வையும் பதிவும் என்ற தனது ஆய்வு நூலை தன்னுடைய 21 ஆவது நூலாக வெளியிடுகிறார்.

தமிழகத்திலிருந்து ஈழம் வரையான கண்ணகி வழிபாட்டின் நீண்ட வரலாற்றைப் படம்பிடித்துக் காட்டியுள்ளது இந்நூல்.

இதற்காகத் தமிழகத்தில் உள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்த கோயில்களுக்கு நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டதுடன் இத்துறையில் புலமையுடைய தமிழக, கேரள மாநில அறிஞர்களுடன் கலந்துரையாடி தமிழகத்தின் வரலாற்றுப் புலமை வாய்ந்த கண்ணகி வழிபாட்டு ஆலயங்கள் பலவற்றின் புகைப்படங்களையும் வழங்கியுள்ளார். ஈழத்திற்கு கண்ணகி வழிபாடு பரவிய வரலாற்றை விரிவாக ஆராய்ந்து

**வே. தவராஜா**
**செயலாளர்**
**மட்டக்களப்பு தமிழ்ச் சங்கம்**

தமிழர்களிடையே கண்ணகி வழிபாடாகவும், சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடாகவும் பரிணமித்த வரலாற்றை ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆரம்ப காலங்களில் மூன்று கண்ணகி ஆலயங்களைக் கொண்டிருந்த கிழக்கிலங்கை 18ஆம் நூற்றாண்டில் 15 ஆலயங்களையும், தற்போது 60 ஆலயங்களையும் கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கண்ணகி வழிபாட்டின் பிரதான மையமாக இலங்கை விளங்கியிருக்கின்றது என்பதோடு தமிழ்த் தேசியத்தின் அடையாளமாகவும் விளங்குகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார். தமிழர் சமூகத்திற்கும், எதிர்காலச் சந்ததிக்கும் தான் பிறந்த மண்ணிற்கும் பயனுள்ள மிகப் பெரிய பணியைச் செய்திருக்கிறார்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அவர் ஆற்றி வரும் அரிய தமிழ்ப் பணிகளை தமிழ் கூறும் நல்லுலகம் அங்கீகரிப்பதன் அடையாளமாக பல்வேறுபட்ட பாராட்டுக்கள், கௌரவப்பட்டங்கள், பெறக்கரிய விருதுகளென இன்னோரன்ன பெருமைகளைப் பெற்றாலும் அடக்கமே வாழ்வு, எளிமையே சிறப்பென வாழ்ந்திடும் இப்பெருமகனை நாடும் நாமும் வாழ்த்திடுவோம். அவர் தமிழ்ப் பணி தொடர வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவருடைய இந்த நூல் அரங்கேற்றத்தில் நாமனைவரும் பங்கேற்று அவ்விழா வெற்றியடைய உழைத்திடுவோமாக.

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.

## தமிழின் சிறப்பும் ஆரியரின் இன அழிப்பும்

*(மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க மாதாந்த செயற்குழு கூட்டத்தில் நடைபெறுகின்ற தொடர் இலக்கிய சொற்பொழிவின் 3வது உரையின் தொடர்ச்சி)*

தொடர்ந்து பெருமான் திருவள்ளுவர் அவர்களின் திருக்குறளில் இரண்டாவது அதிகாரமான: வான் சிறப்பைப் பற்றிப் பார்ப்போம். அதிலுள்ள,

'நீர் இன்றுஅமையாது உலகெனின் யார் யார்க்கும்

வான் இன்று அமையாது ஒழுக்கு' என்ற 20வதுதிருக்குறளையும்,

'நெடுங்கடலும் தன்நீர்மைகுன்றும்; தடிந்தெழிலி

தான்நல் காதாகி விடின்'

என்ற 17வதுதிருக்குறளையும் பார்ப்போமானால், மேலே குறிப்பிட்டது போல் செய்திப் பரிவர்த்தனமும்,போக்கு வரத்துமில்லாத காலத்திலே வள்ளுவர் பெருமான் நிலம் ஒருபங்கும், நீர் மூன்றுபங்குமான இந்தஉலகை எவ்வாறு அறிந்தார்? என்ற கேள்வியோடு நீர் இல்லையென்றால் உலகம் என்ற ஒன்று அமையாது என்றும்,வானும் வான் மழையும் இல்லையென்றால்,எவராலும் எதையும் செய்யமுடியாது! நெடியகடலும் வறண்டு வற்றிவிடும். பூசைகள் வழிபாடுகள் நடவாது. தானம் தவம் நடவாது. உழவர் நிலம் உழார் என்றெல்லாம் தீர்க்கமாகச் சொன்ன அறிவாற்றலை எண்ணியெண்ணி வியக்க வேண்டியுள்ளது.

மேலும் தஞ்சைப் பெருமகனார் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களும் திருவள்ளுவருடைய

**ஆ.மு.சி.வேலழகன்**

திருக்குறளைஅடியொற்றி.

'பூமியிலே மாரியெலாம் சூரியனாலே- பயிர்

பூப்பதுவும் காய்ப்பதுவும் மாரியினாலே'

சேமமுற நாள் முழுதும் உழைப்பதனாலே - இந்தத் தேசமெல்லாம் செழிக்குது பார் நம்ம கையாலே என்று பாடியது மட்டுமல்லாமல், தந்தையை இழந்த ஓர் இளம் விவசாயிக்கு தந்தையின் ஸ்தானத்திலே நின்று இளைஞன் செய்ய வேண்டிய விவசாயத்தை எப்படிச் செய்யவேண்டுமென்று யதார்த்தமாகக் கூறும் கவிதையில்,
மணப்பாரைமாடுகட்டி

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# கட்டிளமைப் பருவ உளநலம்

## ஆலோசனை வழங்குதல்



ஆலோசனை வழங்குதல்

----------------------------------------

ஆலோசனை என்பது குறிப்பிட்ட ஒரு தேவைக்கு வழங்கப்படுகின்ற செய்யக்கூடிய, செய்யக்கூடாத அறிவுறுத்தல்களாக அமையும். அத்துடன் அவ்வாலோசனை முடிந்துவிடும். பிரச்சினையுடன் உங்களை அணுகும் பயனாளிக்கு ஆலோசனை வழங்க முடியாது. ஆனால் உங்களுடன் உரையாடிச் செல்லும் போது பயனாளி சில விடயங்களை கூறும்போது அவ்விடத்தில் பொருத்தமான ஆலோசனை ஒன்றை கூறலாம். (உதாரணமாக இந்த விடயத்தைப் பற்றி உங்கள் காதலனுடன் கதைக்க வேண்டாம்). பொதுவாக உதவியளிக்கும் உதவியாளர்கள், பயனாளிக்கு ஆலோசனை வழங்குவதற்கு சில வேளைகளில் முற்படுவார்கள். இது பொதுவான ஒரு விடயமாகும். பயனாளியும் தனது பிரச்சினைக்கான தீர்வு நீண்டு செல்வதை விரும்புவதில்லை. குறுகிய காலத்திலேயே அப்பிரச்சினையில் இருந்து விடுபட வேண்டும் என்ற மனநிலையுடனேயே உங்களை நாடி வருகின்றார்கள். அத்துடன் அவர்கள் எதிர்காலம் குறித்த எந்த எதிர்பார்ப்புகளும் இன்றி, மனச்சோர்வுடன் இருக்கும்போது பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ இடையீடுகள் சவாலாக அமையும். இவ்வாறான வேளைகளில் பயனாளி தற்போதுள்ள பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு உடனடியாக செய்யக்கூடியவை எவை என்பதைப் பற்றிய ஆலோசனைகளை வழங்குவது பொருத்தமானது.

பயனாளியை, உளநல மருத்துவரிடம் காட்ட வேண்டும் என்றால் அதற்கான தேவை குறித்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் அத்துடன் உதவியையும் செய்யலாம். இவ்வாறு செய்யும்போது பயனாளி உங்களது ஆலோசனையிலும், உங்களிலும் தங்கிவிடாதபடி பாதுகாத்துக்கொள்வது மிகமிக இன்றியமையாத விடயம். அல்லாது போனால் எதிர்காலத்தில் நீங்கள் உங்கள் பயனாளியின் பிரச்சினைகற்கான முகாமைத்துவ செயற்பாடுகளைச் செய்ய முடியாத ஒரு கையறு நிலை ஏற்பட்டுவிடும். இவ்வாறான நேரங்களில், நீங்கள் உங்கள் பயனாளியிடமே சில கேள்விகளை கேட்பதன் மூலம், பயனாளி தனது பிரச்சனை குறித்த ஆலோசனைகளை தானாக பெற்றுக்கொள்ள உதவலாம். 'நீங்கள் இப்போது இருக்கின்ற நிலைமைபோல் உங்கள் உறவினர், நண்பர் ஒருவர் இருந்தால் என்ன ஆலோசனை கூறுவீர்கள்? அவர்கள் தங்களது பிரச்சினைகளுடன் தனிமைப்பட்டு, மனச்சோர்வுடன் இருக்கும் நிலைமைகளில்? உதவிகளை பெற்றுக்கொள்ள மனமில்லாத நிலைமைகளில்? அத்துடன் மற்றவர்களிற்கு சுமையாகி விடுவேனோ? என என்னும் போது? இவ்வாறான கேள்விகள் மூலம் தங்களது பதில் எவ்வாறு அமையும் என்பதை அறிந்து, அதற்கு ஏற்றாற்போல் அவர்கள் கேட்கும் கேள்விகளிற்கும் அவர்கள் ஊடாக பதிலை பெற்று, அவர்களது சந்தேகங்கள், கேள்விகளிற்கு அவர்களது பதிலே ஆலோசனையாக அமைய உதவலாம்.

ஆலோசனை வழங்கும்போது எதிர்பார்க்கப்படுபவை

பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ உதவியளித்தலின்போது வழங்கப்படும் ஆலோசனைகள் மூலம் பயனாளி உற்சாகத்துடன், சமூக ஆதரவை பெற்றுக்கொண்டு, நெருக்கீடுகளிற்கு தானாக முகாமைத்துவம் செய்யும் வழிமுறைகள் என்பவற்றை கற்றுக்கொள்வதும் உள்ளடங்கப்படுகின்றது.

பிரச்சினைகளை கையாள்வதில் பாதகமான வழிமுறைகள் எவை என்பதை உங்களது பயனாளி உணர்ந்து கொள்வதற்கு ஏதுவாக அவரிடமே சில கேள்விகளை கேட்டு, அதற்கு அளிக்கப்படும் பதிலைக் கொண்டே உங்கள் பயனாளி அதனை உணர்ந்து கொள்ள உதவ வேண்டும். உங்களது பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு நிம்மதியாக இருப்பதற்கு போதை தரும் பொருட்களை பாவிக்கலாமா? இவ்வாறு கேட்கப்படும் கேள்விகளுக்க பயனாளி அளிக்கும் பதிலைக் கொண்டே பிரச்சினைகளிற்கான முகாமைத்துவத்தில் சரியான உதவியளிக்கும் முறைகள், பிழையான உதவியளிக்கும் முறைகள் என்பவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வரைக்கும், தெளிவாக பொதுவாக எடுத்துரைக்க வேண்டும்.

உதவியாளர் - பயனாளி உறவு முறைகள்-உதவியாளர் வகிபாகம்

----------------------------------------------------------------

எமது பகுதிகளில் பல்வேறு வகையான உதவியளிக்கும் முறைகள் உள்ளன. இங்கு உதவிநாடி வருபவரிற்கு அவர்கள் வழமையாக செய்யும் முறைகளின் அடிப்படையிலேயே அவ்வுதவி கிடைக்கிறது. பெரும்பாலும் பயனாளி தமது தனிப்பட்ட பிரச்சினைகளை அவர்களுடன் மனம்திறந்து முழுமையாக கதைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. பாரம்பரிய முறைகளூடாக உதவியளிப்பவர்கள், நாட்டு வைத்தியர்கள், வாக்கு சொல்லுபவர்கள் போன்ற முறைகளில் அவர்கள் பயனாளிக்கு செய்யும் முறைகளிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறான முறைகளும் பாதிக்கப்பட்டவர்கள் மீளெழுவதற்கு உதவிசெய்கின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

பிரச்சினைகளிற்கான முகாமைத்துவ உதவியாளராகிய நீங்கள், பயனாளியின் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் நன்றாக விளங்கி அதற்கு ஏற்றாற்போல் உதவி செய்பவர் என்பதையும், உங்களது வகிபாகத்தையும் பயனாளியிடம் தெளிவாக எடுத்துக் கூறுங்கள். இவ்வாறாக பயனாளியுடன் உங்களது வகிபாகத்தைப்பற்றி எடுத்துக்கூறும் போது, அதனை அவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு ஏதுவாக சில உதாரணங்களை கொடுக்கலாம். ஒரு ஆசிரியர் வகுப்பறையில் மாணவனிற்கு பாடங்களை கற்பித்துக் கொடுப்பார். மாணவனது சந்தேகங்களிற்கு பொருத்தமான விளக்கமளிப்பர். பரீட்சை, பரீட்சைகளுக்கான தயார்படுத்தல், படிக்கும் முறைகள், படிப்பதன் முக்கியத்துவம் போன்ற விடயங்களையும் எடுத்துக்கூறுவார். ஆனால் மாணவரிற்காக ஆசிரியர் பரீட்சை எழுத முடியாது. பரீட்சையை மாணவனே எழுத வேண்டும்.

வகுப்பறையில் ஆசிரியர், மாணவர் உறவு எப்படி உள்ளதோ, அவ்வாறே உதவியாளர் - பயனாளி உறவும், உதவியளிக்கும் முறைகளும் இருக்க வேண்டும். பயனாளி தனது சொந்த வாழ்க்கையில் நிறைந்த அனுபவசாலி.

அதில் ஒரு சிறுபகுதியே உங்களிற்குள் இருக்கிறது. இதுவரை தனது பிரச்சினைகளுடன் வாழ்ந்தது, முகம்கொடுத்தது போன்ற பல விடயங்கள் உங்கள் பயனாளி செய்துள்ளார்.

இதனை ஏற்றுக்கொண்டு அதன் மூலமாக பயனாளியில் நம்பிக்கையை கட்டி வளர்த்து உதவி செய்ய ஆரம்பிப்பது, பயனாளி குறித்து நீங்கள் எடுக்கப்போகும் சில முடிவுகளை தவிர்ப்பதற்கு ஏதுவாக அமையும்.

உதவியாளர் - பயனாளி உறவுமுறை எதுவென்பதை தெரிவிப்பதற்கான சில உபாயங்கள்

----------------------------------------------------

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விவசாய உபகரணம் ஒன்றின் பயன்பாடு குறித்து அதன் பொறியியல் வல்லுனர் விவசாயி ஒருவருக்கு விளங்கப்படுத்தினால் அதனை அறிந்து கொண்ட விவசாயி தனது வயல் நிலத்தில் உபயோகிக்கும் போது அதனது பாவனை, தொழிநுட்பம் அணுகுமுறைகள் என்பவற்றை தானே கற்றுக்கொள்ளலாம். இதற்கு தொடர்ச்சியாக அந்த பொறியியல்வல்லுனர் உடனிருக்க வேண்டியதில்லை.

மருத்துவ உபாயங்கள்

----------------------------------------------------

மருத்துவ உதவியை நாடியுள்ள நோயாளி ஒருவரின் நோய்நிர்ணயம், பாவிக்கும் மருந்துகள், பின்பற்ற வேண்டிய உணவுமுறைகள், நடைமுறை வாழ்க்கை மாற்றம், உடற்பயிற்சிகள் தொடர்சிகிச்சை, மாதாந்த களதரிசிப்பு என்பவற்றை எடுத்துக்கூறும்போது அதனை விளங்கிக்கொண்ட நோயாளி அவ்வாலோசனைகளை தானே பின்பற்றி தனது உடல் நோய்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் வேண்டும். இங்கு வைத்தியர் ஒவ்வொரு நாளும் உடனிருந்து உதவுவதில்லை.

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

விளையாட்டு பயிற்றுவிப்பாளர் உபாயம்

----------------------------------------------

தடகள வீரர் ஒருவருக்கு பயிற்றுவிக்கின்ற பயிற்றுவிப்பாளர், உடற்பயிற்சி, தயார்படுத்துதல், ஆரம்பத்தில், முந்தி செல்லுதல், முடிவுக்கு கொண்டுவருதல், போட்டி போட்டு வெற்றி இலக்கை அடைதல் போன்ற செயற்பாடுகளை பயிற்சியாகவும், செயல்வடிவமாகவும் பயிற்றுனருக்கு சொல்லிக் கொடுத்தால் அதன்படி பயிலும் வீரர் செயற்படுவார். இங்கு பயிற்றுனரிற்காக பயிற்றுவிப்பாளர்



ஓடுவதில்லை. மேற்கூறிய உபாயங்கள் மூலம் பயனாளி எவ்விதத்தில் நீங்கள் கூறுகின்ற உதவியளிக்கும் உபாயங்களைப் பின்பற்றி தனது பிரச்சினையில் இருந்து மீளெழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதை சந்தேகம் இன்றி விளக்கிக் கொள்ளப்படும். அதன்படி நாளாந்தம் நீங்கள் கற்றியக்கூடிய விடயங்களை பயின்று தனது பிரச்சினையில் இருந்து வெளிவரட்டும்.



தொடர்ச்சி...

## இலக்கிய அரங்கிலிருந்து அரசியல் அரங்கிற்கு வருகைதந்த படைப்பாளி எம்.எச்.எம். அஷ்ரப்

ரகுநாதனுக்கு அறிமுகப்படுத்தினேன். அஷ்ரப்பின் மந்திரப்புன்னகை தவழும் முகத்தை மறக்கமுடியவில்லை. கலந்துரையாடல்களில் அமைதியும் நிதானமும் அவரிடம் காணப்பட்ட குணவியல்புகள். ரகுநாதனுடன் கவிதை தொடர்பாக அஷ்ரப் பேசியது குறைவு. ஆனால், கேட்டுத்தெரிந்துகொண்டது அநேகம்.

புதுக்கவிதையை ரகுநாதன் தீவிரமாக எதிர்த்தவர். அஷ்ரப் மரபுக்கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் விரும்பியவர். எழுதியவர். அவரது அரசியல் தொடர்பான பல செய்திகளை வீரகேசரியில் எழுதியிருந்தாலும், எனக்கு அவரது இலக்கியப்பக்கம் தான் பிடித்தமானது. இனம்சார்ந்த அரசியல் குறித்து எதிர்வினைச் சிந்தனைகளை நான் அப்போது கொண்டிருந்ததாலோ என்னவோ, அவரது அரசியல் பிரவேசம், ஒரு நல்ல கவிஞனின் அஸ்த்தமனத்துக்கு காரணமாகிவிடும் என்றுதான் எண்ணினேன். ஆனால், அந்த அரசியல் பிரவேசமே அவரது உயிரின் அஸ்த்தமனத்துக்கு காரணமாகும் என அன்று எண்ணவில்லை. ஆனால், அவரோ தினமும் கவிதையும் எழுதிக்கொண்டு அரசியல் பணிகளிலும் தீவிரமாகியிருந்தார்.
1973 இல் சட்டக்கல்லூரியிலும், 1983 இல் கல்முனையிலும் நான் பார்த்த அஷ்ரப் ஒரு இலக்கியவாதி. இலங்கைக்கு 1997 இல் மீண்டும் சென்ற சமயத்தில் பார்க்கவிரும்பியபோது அவர் அரசியல்வாதி, அமைச்சர்!
தமிழ்த்தேசியம், ஈழத் தமிழனுக்கு ஒரு நாடு என்றெல்லாம் பேசும் பல தமிழ்த் தலைவர்கள், ஈழத்து தமிழ் இலக்கியத்திற்காகவும் அதன் வளர்ச்சிக்கும் எதனையும் செய்யவில்லை. ஆனால், அஷ்ரப் செய்தார். தனது இனத்திற்கான அரசியலும் பேசிக்கொண்டு, ஈழத்து இலக்கியத்தையும் நேசித்தார். எழுத்தாளர்களை அரவணைத்தார். மல்லிகை இலக்கிய இதழுக்கு எத்தனை தமிழ்த்தலைவர்கள் சந்தா செலுத்தி வரவழைத்து வாசித்து ஆதரித்தார்கள்..?
அஷ்ரப்பின் "நான் எனும் நீ" என்ற பெரியதொரு கவிதைத்தொகுப்பு அவரது கவியாளுமையை பேசிக்கொண்டிருக்கிறது. அரசியலில் அவரது இழப்பால் நேர்ந்த பெரிய வெற்றிடத்தை அவரது சமூகம் பேசிக்கொண்டிருக்கிறது. இந்நூல் பற்றி கலைஞர் மு. கருணாநிதி, கவிக்கோ அப்துல் ரகுமான், பேராசிரியர் எம். ஏ. நுஃமான் ஆகியோர் தமது மதிப்புரைகளை வழங்கியிருக்கிறார்கள்.

(தொடரும்)

தொடர்ச்சி...

## எதிர்பார்க்கப்படும் மாநகர அபிவிருத்திகள் - ஒரு வாசகர் கருத்து

அதற்கான கட்டிடங்கள் அமைப்பதற்காக அதன் இயற்கையழகு முற்றிலும் அழிக்கப்படும் என்பது நிச்சயமாகும்)

6.கல்லடி கடற்கரை, முகத்துவாரம் போன்ற சுற்றுலா முக்கியத்துவமிக்க இடங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

7. அநேகமான உட்புற வீதிகள் செப்பனிடப்படுதல் வேண்டும்.(உ+ம் கல்லடி சமுர்த்தி வங்கி அருகாமையில் உள்ள வீதி)

8.வடிகான்கள் புனரமைக்கப்படுவதுடன் தேவையான இடங்களில் புதிதாக அமைக்கப்படுதலும் வேண்டும்.

9. கழிவகற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதல் வேண்டும். மேற்குறித்தவற்றையே தெரிவிக்க விரும்புகின்றேன்.

தொடர்ச்சி...

## ஓவியர் புகழேந்தியுடனான கலந்துரையாடலின் மனப்பதிவு

சொல்லைப் பயன்படுத்துவதாகவே விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஒவ்வொரு கலைஞர்களுக்கும் தாங்கள் தாங்கள் வாழ்கின்ற காலமே சமகாலமாகும். அவர்கள் அந்தந்தக் காலப்பகுதியின் விடயங்களை அந்தக் காலப்பகுதியின் வெளிப்பாட்டு முறையில் வெளிப்படுத்துவதுவே சமகாலப் படைப்பு என்பதாகும். அதாவது ஒரு கலைஞன் தனது காலகட்டப் பிரச்சினைகளை தனது காலகட்ட வெளிப்பாட்டு முறையினூடாக வெளிப்படுத்துவது அவனுக்கு சமகாலப் படைப்பு என்பதாகும். எனவே சமகாலம் என்பது 2017ம் ஆண்டு என்றோ அல்லது 2018ம் ஆண்டு என்றோ பொருள் இல்லை.

ஓவியம் தொடர்பான விடயங்களைத் தவிர ஓவியர் புகழேந்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இருந்த நெருக்கமான உறவை அடிப்படையாகக் கொண்டு போராட்டம் தொடர்பாகவும் அரசியல் தொடர்பாகவும் சில கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தக் கேள்விகளினூடு நம்மில் பலர் இன்னும் சொந்தமாகத் சிந்திக்கத் தெரியாதவர்களாகவும். இவ்வளவு கால போராட்ட அனுபவத்தின் அறிவை விளங்கிக் கொள்ளாதவர்களாக இருப்பதையும் அறியக்கூடியதாக இருந்தது.

ஓவியம், சிற்பம் தொடர்பான கலந்துரையாடல்கள் செய்யும் போது அது பற்றிய காட்சிப்பதிவுகளை கலந்து கொள்பவர்களுக்கு எடுத்துக்காட்டி உரையாடல்களை மேற்கொள்வது எதிர்காலத்தில் பயனுடையதாக இருக்கும். இதனை 'கா' இலக்கிய வட்டமும் அரங்க நிறுவனமும் கவனத்தில் எடுத்து செயற்படுவார்கள் என நம்புகின்றோம்.

தொடர்ச்சி...

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 21

கச்சேரியில் தாக்கல் செய்தது.

இதனால் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் அதாவது அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் கோரிக்கையை ஏற்று ஒரு பொதுசின்னத்தின் கீழ் ஒன்றிணைந்து ஓரணியில் போட்டியிடச் சம்மதித்திருந்த தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்துத் தனித்தனியே போட்டியிடத் தீர்மானித்தன. பல கட்சிகள் போட்டியிடுவதன் மூலம் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் முயற்சி, பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்த கதையாக மாறிவிடக்கூடாதே என்று எண்ணிய இப் பத்தி எழுத்தாளர் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசி அவர்களை ஆசுவாசப்படுத்தி அக்கட்சிகள் இணைந்த தனியான சுயேச்சைக் குழுவொன்றை அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் தலைமையில் ஏற்படுத்தும். விடயத்தில் வெற்றியீட்டினர்.

(தொடரும்)

தொடர்ச்சி...

## தமிழின் சிறப்பும் ஆரியரின் இன அழிப்பும்

மாயவரம் ஏரு பூட்டி
வயக்காட்டஉழுது போடுசின்னக்
கண்ணு–பசுந்

தழையைப் போட்டுபாடுபடு
செல்லாக்கண்ணு!

ஆத்தூரு கிச்சடிச்சம்பா
நாத்து வாங்கி வெதை வெதைச்சு
நாத்தைப் பறிச்சி நட்டுப் போடு
சின்னக்கண்ணு
தண்ணியே ஏத்தப் புடிச்சிறைச்சிப் போடு
செல்லக்கண்ணு.....

இந்தக்கவிதை அடிகளில் வயல் உழ நல்ல மாடுகளை மணப்பாரையில் வாங்கும். மாயுவரத்திலே, கெட்டியான ஏர் செய்யும், மரவேலைசெய்யும் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அங்குள்ள ஏரை வாங்கியும், ஆத்தூரிலே கிச்சடிச்சம்பா நாத்தை வாங்கி நட்டும் இதன் பின் ஏத்தால நீரை இறைத்தும், களை பிடுங்கியும், கதிர் பறிந்து வெளையும் வரை கவனமாக அனைத்தையும் ஒழுங்காச் செய்யும்.

வயல் விளைந்ததும், மதுரை மாவட்டத்திலே அறுவடைசெய்யும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு அறுவடைசெய்து, பின் அவற்றை அடித்துத்தூற்றி அளந்து, வண்டியிலே ஏற்றிக்கொண்டு பொள்ளாச்சிச் சந்தையிலே,விருதுநகர் வியாபாரிக்கு நல்ல நியாயமான விலைக்கு விற்று, போட்டுவிற்ற அந்தப் பணத்தை வீண் செலவுகள் செய்யாமல் அம்மா கையில் கொடு அவங்கதை ஆறைநூறு ஆக்குவார்கள் என்று பத்தடிக் கவிதையிலே எவ்வளவு அழகாகவும் ஆக்கபூர்வமாகவும் சொல்லியுள்ளார்.

## மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனத்தின் கௌரவிப்பு விழா

ஸ்ரீ விஸ்வகர்ம ஜயந்தியை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனம் நடாத்தும் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கௌரவிப்பு, கலைஞர்கள் கௌரவம் மற்றும் உள்ளூராட்சி மன்றத்திற்குத் தெரிவான உறுப்பினர்களின் அறிமுகம் என்பன எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (07) காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மட்டக்களப்பு மாவட்ட விஸ்வகர்ம சம்மேளனத்தின் தலைவரும் மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினரு மான சிவம் பாக்கியநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன்,மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் ஆகியோரும், விசேட அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த வைத்திய ஆலோசக நிபுணர் வைத்தியக் கலாநிதி கே.ரி. சுந்தரேசன், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் சட்டத்தரணி கி.துரைராசசிங்கம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி எஸ்.அன்புதாசன் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.. சண்முகநாதன் ஆகியோரும்

கௌரவ அதிதிகளாக இலங்கை (கொழும்பு) விஸ்வகர்ம சங்கத் தலைவர் எஸ். செல்வரட்ணம், மட்டக்களப்பு, கொழும்பு சொர்ணம் குழுமங்கள் முகாமைத்துவப் பணிப்பாளர் எம். விஸ்வநாதன், பண்டாரவளை விஸ்வகர்ம நல உரிமைச் சங்கத் தலைவர் ஆ.வரதராஜா மற்றும் ஓய்வுநிலை கணக்காளர் பெ.முத்துலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் கிழக்கு, யாழ்ப்பாணம், சப்பிரகமுவ, றுகுணு, கொழும்பு, களனி, மொறட்டுவ மற்றும் ஊவாவெல்லச ஆகிய பல்கலைக் கழகங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 40 மாணவர்களுக்கான ஊக்குவிப்புப் பணமும் பாராட்டு விருதும் வழங்கப்படவுள்ளன.

அத்தோடு கலைஞர்களான சாந்தினி தர்மநாதன் (சங்கீதம்), தவராஜா மோகனப்பிரியன் (நடனம்), பாண்டியூர் பொன் நவநீதன் (கவிதை) மற்றும் இரா. நித்தியானந்தன் (மிருதங்கம்) ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பைன் ஆர்ட்ஸின் சிறார் நிகழ்வு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு (F) பைன் ஆர்ட்ஸ் நிறுவன ஏற்பாட்டில் மட்/ புனித திரேசா பெண்கள் பாடசாலையில் சிறுவர்தின கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெறவுள்ளன.

07.10.2018 ஞாயிறு காலை 10.35 மணிக்கு மட்/புனித திரேசா பெண்கள் பாடசாலையின் பிரதான மண்டபத்தில்

(F)பைன் ஆர்ட்ஸ் கலைக் கழகத்தினால் இந்நிகழ்வு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர்தினத்தை முன்னிட்டு நடாத்தப் பட்ட சிறுகதை ஓவியப்போட்டிகளில் பங்குபற்றிய வர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவிருக்கிறது.

இந்த பைன் ஆர்ட்ஸ் நிறுவனம் பல்வேறுபட்ட கலை, சமூக, கலாசார செயற்பாடுகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய
# நவராத்திரி விழா நிகழ்வுகள் - 2018




புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை திதியில் 9ம் திகதி செவ்வாய்க்கிழமை 2018ம் ஆண்டு நவராத்திரி பூசை ஆரம்பமாகி துர்க்கை அம்மாளுக்கு மூன்று நாளும், லக்ஷ்சுமிக்கு நான்கு நாளும், சரஸ்வதிக்கு மூன்று நாளுமாக பூசைகள் இடம்பெற்று 18ம் திகதி வியாழக்கிழமை 2018 அன்று நிறைவடைய உள்ளது. எனவே பாடசாலை செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள், கிராம மக்கள் அனைவரையும் வருகை தந்து பூசை நிகழ்வுகளில் பங்கு பற்றி முப்பெரும் தேவிகளின் திருவருட் கடாட்சத்தினை பெருமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

ஆலய நவராத்திரி பூசைகள் யாவும்
ஆலய பிரதம குரு சிவஸ்ரீ
ஜெயக்குமார் ஐயா அவர்களால்
நடைபெறும் (திருகோணமலை)

அன்னை ஸ்ரீ பேச்சியம்மன்
ஆலய பரிபாலன சபையினர்
புலையவெளி


தினமும் பூசைகள் யாவும் மாலை
06மணி முதல் நடைபெறுமு

**லக்ஷ்சுமி பூசை.**




09-10-2018
10-10-2018
11-10-2018

**துர்க்கை அம்மாள் பூசை.**



12-10-2018
13-10-2018
14-10-2018
15-10-2018

**சரஸ்வதி பூசை.**



16-10-2018
17-10-2018
18-10-2018

**19-10-2018**

ஏடு தொடக்கும் நிகழ்வு
காலை 07மணி முதல்

தினமும் பஜனை,பூசைகள், சைவ வினாவிடைப் போட்டிகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெறும்.

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY



**Are you 18+ and have GCSEs or work experience?**

**Do you have A levels but missed your place at university?**

- **Foundation Degree Business** (London Metropolitan University)
- **Foundation Degree Hospitality Management** (London Metropolitan University)
- **HND Business** (Pearson)
- **HND Hospitality Management** (Pearson)
- **BA (Hons.) Final Year- Business** (London Metropolitan University)
- **BA (Hons.) Final Year- Hospitality Management** (London Metropolitan University)

Student Finance Available

Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa